Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!

மகாராசி சில்க்ஸ்

மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்


மகாராசி சில்க்ஸ்

59, நவீனசந்தை உப்புறம், யாழ்ப்பாணம்.

T.P.No : 0777286247.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 3 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 24 (15.04.2004) வியாழக்கிழமை இதழ்:197

## தான் ஒரு பிரகாசமான நட்சத்திரம் என்பதை பிரபாகரன் நிரூபித்துள்ளார்!



### சர்வதேச ஊடகம் தெரிவிப்பு

தமிழீழ தாயகத்திலிருந்து கருணாவை அப்புறப்படுத்திய தன் மூலம், தான் ஒரு பிரகாசமான நட்சத்திரம் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நிரூபித்துள்ளார் என இந்தியப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுரையில், தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த காலங்களில் எதிர்நோக்கிய சவால்கள் குறித்து குறிப்பிட்டுள்ள கட்டுரையாசிரியர், அச்சவால்களை தமிழீழ தேசியத் தலைவர் எவ்வாறு எதிர்கொண்டு முன்னேறினார் எனவும் கட்டுரையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்துக்கு முடிவு காண சுவிற்சர்லாந்தும் விருப்பம்!

(கொழும்பு)

இரு தசாப்த காலமாக இலங்கையில் இடம் பெற்ற யுத்தத்திற்கு முடிவுகாணும் விடயத்தில் சுவிஸும் ஒத்துழைக்க விரும்புகிறது என அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சுவிஸ் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் இந்தத் தகவலைத் தெரிவித்ததாக நேற்றிரவு ஊடகமொன்று தகவல் வெளியிட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கையில் இரு தசாப்தங்களாக இடம் பெற்றுவந்த பாரிய இனமோதல் தணிந்துள்ளது. அது மீண்டும் வெடிக்கக்கூடாது. அவ்வாறு மீண்டும் இலங்கையில் யுத்தம் ஏற்படாமல் இருப்பதற்கு அரசும், விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும்.

இந்தச் சமாதான முயற்சிகளில் பங்குபற்றி இலங்கையில் சமாதானம் மலர்வதற்காக சேவை புரிவதற்கு சுவிஸ் அரசு பெரும் ஆர்வத்துடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தரவின் பேரில்

# படையினரின் உதவியுடன் கருணா

# அவுஸ்ரேலியாவுக்கு தப்பியோட்டம்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா, அரசாங்கத்தின் பாதுகாப்பு உதவியுடன் அவுஸ்ரேலியாவுக்குத் தப்பிச்சென்றதாக - விமானநிலைய வட்டாரங்களை மேற்கோள்காட்டி, இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டது.

நேற்றுக்காலை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக அவுஸ்ரேலியாவுக்குப் புறப்பட்டுச் சென்ற கருணா - அவுஸ்ரேலியாவில் பெயர் அறியப்படாத இடமொன்றில் வசிக்கும் தனது குடும்பத்தினருடன் இணைந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து தனியாக இயங்கப்போவதாக அறிவித்த கருணாவை, புலிகளின் தலைமைப்பீடம் துரோகி என அறிவித்திருந்தது.

சுமார் 41 நாட்களின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை கருணாவை தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளின் மீட்பு அணிகள் ஆரம்பித்தன.

இதையடுத்து தனது அதிகாரத்தை நிலை நாட்டிக்கொள்ளமுடியாத நிலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் - இராணுவம் மட்டக்களப்பில் நட்புறவுச் சந்திப்பு!

## போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மட்டக்களப்பில் மீண்டும் பணியில்!

(கொழும்பு)

# மட்டக்களப்பில் நட்புறவுச் சந்திப்பு!

## வவுணதீவில் இன்று நடைபெறும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று, இன்று பிற்பகல் 2 மணிக்கு வவுணதீவு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ், மட்டக்களப்பு அம்பாறை தளபதி ராம் ஆகியோரும் இராணுவத் தரப்பில் - 23 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் முன்னிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நல்லுறவைப் பேணும் நோக்குடனேயே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் மீண்டும் பணியில்!

(கொழும்பு)

மட்டக்களப்பு - அம்பாறையில் கருணாவின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்றுமுதல் தமது பணிகளை மீள ஆரம்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவரான ஹக்ரப் ஹொக்லண்ட் -

மீண்டும் எமது தொடர்புகளை ஆரம்பித்துள்ளதுடன் வழமையான கண்காணிப்புப் பணிகளையும் ஆரம்பித்திருக்கிறோம் எனத் தெரிவித்தார்.

ஸ்கண்டினேவிய கண்காணிப்பாளர்கள் மீண்டும் தமது பணியை ஆரம்பித்திருப்பதையடுத்து கிழக்கில் இயல்புநிலை திரும்ப ஆரம்ட த்திருக்கிறது.

கருணா தனித்து இயங்கப்போவதாக அறிவித்த பின்னர் கடந்த ஆறு வாரங்களாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இந்தப் பகுதியில் தமது நடவடிக்கைகளை நிறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் நாளை தமிழ்ச்செல்வனைச் சந்திப்பர்!

(கொழும்பு)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் கீழ் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ள 22 உறுப்பினர்களும், நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து ஆலோசனை நடாத்தவுள்ளனர்.

தேர்தலில் தெரிவான 20 எம்.பி.க்களும், தேசியப் பட்டியல் மூலம் தெரிவான இரண்டு எம்.பி.க்களுமாக மொத்தம் 22 எம்.பி.க்களும் வெள்ளிக்கிழமை காலை கொழும்பில் ஆர். சம்பந்தனின் தலைமையில் நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டபின்னர், கிளிநொச்சி புறப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்கள் கூடும்போது, முதலாவது நாடாளுமன்றம் கூடும்பொழுது, சபாநாயகரைத் தெரிவுசெய்வதில் எடுக்கப்பட வேண்டிய நிலைப்பாடுகள் உட்பட, பலவித அடுத்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கருணா அணியைச் சேர்ந்த நால்வருக்கு விளக்கமறியல்!

## மட்டக்களப்பு நீதிமன்றம் உத்தரவு

(மட்டக்களப்பு)

கல்முனை - மட்டக்களப்பு வீதியில் வைத்து கடந்த மாதம் 31 ஆம் திகதி ஆயுதங்களுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட கருணா அணியைச் சேர்ந்த நால்வரையும் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மஞ்சத்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகில் வைத்து காத்தான்குடி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சச்சு மாஸ்ரர் என அழைக்கப்படும் கணபதிப்பிளை மகேந்திரன், மயூரன் என அழைக்கப்படும் சாமித்தம்பி ராஜன், மனோகர் என அழைக்கப்படும் வேலப்போடி வரதகுமார், குபேரன் என அழைக்கப்படும் அரசமணி சுபராஜ் ஆகியோரே மட்டக்களப்பு நீதிமன்ற நீதிபதி ஆஸ்மீர் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# பசளை உற்பத்தி தொழிற்சாலையை காக்கைதீவில் அமைக்க ஆலோசனை

## நொராட் நிறுவன அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காக்கைதீவுப்பகுதியில் பசளைத் தொழிற்சாலை ஒன்று அமைப பதற்கு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நொராட் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் இருந்து அகற்றப்படும் கழிவுகளைக் கொண்டு பசளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்க கடந்த மூன்று மாதமாக தகுந்த இடம் ஒன்று தேடப்பட்டுவந்தது. இதற்கமைய பசளை ஆலை ஒன்றை காக்கை தீவுப்பகுதியில் அமைப்பதற்கு ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பசளைகள் தயாரிக்கும் முறை ஒன்றை கடந்த இரு வருடத்திற்கு முன்பு ஜி.ரி.இசட் ஆலோசகர் கிறாவர் என்பவர் யாழ்.மாநகரசபைக்கு அண்மையாக தயாரித்துக் காட்டினார்.

இந்தத் தயாரிப்பு வெற்றிகரமாக இடம்பெற்றது. இதற்கமைய பசளை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு நொராட் திட்டத்தின் கீழ் 17 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதென அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோத மண் ஏற்றிய ஆறுபேருக்கு தலா 5 ஆயிரம் குற்றப்பணம் அறவீடு!

## யாழ். நீதிவான் உத்தரவு

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற 6 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் குற்றப்பணம் செலுத்துமாறு யாழ்.நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அனுமதியின்றி சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற ஆறுபேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் ஆறுபேரிடமும் மண் ஏற்றுவதற்கான அனுமதிப் பத்திரம் எதுவும் இருக்கவிலலையென பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் தெரியவந்தது.

இவர்கள் அனைவரும் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவேளை குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஒவ்வொருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான் உழவு இயந்திரத்தில் ஏற்றி வந்த மண்ணை கனான் சிறுவர் இல்லததின் கட்டடப்பணிக்கு வழங்குமாறு பணித்தார்.

### பிரதேச செயலக விளையாட்டுப்போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் இடம்பெறும்.

இந்த விளையாட்டு நிகழ்வுகளை ஒருங்கிணைப்பதற்காக பிரதேச செயலரைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று தெரிவுசெய்யப் பட்டுள்ளது. (24)

## ஜெனிவா இலங்கை அணியுடனான

# ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஜொலி ஸ்ரார் கழகம் வென்றது

சுவிற்சலாந்தில் இருந்து வருகை தந்த ஜெனிவா இலங்கை கிரிக்கெட் கழகத்திற்கும், யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 40 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் யாழ்.ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 117 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

இப் போட்டியின் ஸ்கோர் விபரம் வருமாறு-

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி - 40 ஓவர்களில் 7 விக்கட் இழப்பிற்கு 311 ஓட்டங்களினைக் குவித்தது. இதில் பத்து பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் கிருஸ்ணராஜா 135 ஓட்டங்களையும், சயிலேஸ்ஹரன் 37 ஓட்டங்களையும், மணிவணணன் 36 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். ஜெனிவா கிரிக்கெட் கழக அணி சார்பில் சஞ்சீவன், நிரோசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜெனிவா இலங்கைக் கிரிக்கெட் கழக அணியினர் 32.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 194 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் 17 ஓட்டங்களால் ஜொலிஸ்ரார் அணி இப்போடடியில் வெற்றிபெற்றது.

ஜெனிவா இலங்கை அணியின் சார்பில் டுகல் ஜான்ஸ் 48 ஓட்டங்களையும், நிரோசன் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் ஜெகன் 5 விக்கெட்டுக்களையும், நாதன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

சுவிற்சலாந்தில் இருந்து வருகைதந்த ஜெனிவா இலங்கை அணியில் தமிழர், சிங்களவர், முஸ்லிம் ஆகிய மூவின வீரர்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வணியினர் திருகோணமலை, தம்புள்ள, மாத்தறை, காலி ஆகிய இடங்களிலும் போட்டியில் கலந்து கொண்டு காலி தவிர்ந்த ஏனைய இடங்களில் நடந்த போட்டிகளில் வெற்றிபெற்றிருந்தனர். இறுதியாக கொழும்பில் சில போட்டிகளில பங்குபற்ற இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (58)


## தென்னிந்திய நடனக் கலைஞர்களின் நடன சங்கமும், நடன பயிற்சியும்

பரதநாட்டியம், குச்சுப்புடி, கதகளி ஆகியவற்றை சென்னையை தளமாகக்கொண்ட உலகப்புகழ்பெற்ற தென்னிந்திய சாஸ்திரிய நடனங்களை ஏழு நாட்களுக்கு யாழ்.மண்ணில் நடாத்த உள்ளோம். (04.05.2004 - 10.05.2004 வரை) மேற்படி நிகழ்ச்சியானது நடனப் பாரம்பரியத்தில் உருவாகிய ஆசிரியர்கள், ஆசான்களினால் பயின்றவர்களும் அந்தந்த நடன வடிவங்கள் சார்ந்த கலாஷேத்திரா, வழுவூர், பந்தணை நல்லூர், கலாமண்டலம், வேம்பட்டிகுச்சுப்புடி பயிற்சி நிலையம் முதலிய பள்ளிகளூடாககற்றுத் தேர்ந்த விற்பன்னர்களாகவும், சிறந்த ஆற்றுகையாளர்களாகவும் உள்ள உலகப்புகழ்பெற்ற அலமேலுவும் உஷா வசந்தகுமார், உண்ணிகிருஸ்ணன் பரதநாட்டியமும், ராஜேஸ், லக்ஸ்மி பிரியா குச்சுப்புடி, ஸ்ரீபாலசுப்பிரமணியம் கதகளி ஆகியோரும் அவர்களது நடனக் குழுவினர் இந்நடன நிகழ்ச்சியையும் நடனப் பயிற்சியையும் வழங்க உள்ளார்கள். இந்த ஏழு நாள் நடனப்பயிற்சியில் (பரத நாட்டியம், குச்சுப்புடி, கதகளி) சேரவிரும்பும் மாணவர்கள் 20.04.2004 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பதிவு செய்யவும்.

பதிவு செய்யவேண்டிய முகவரி:

ரி.கே.ரூறிஸ்ற் இன்

பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி), யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 077 6143541, 021-222 5680



(சி-2466)


# மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர் படுகாயம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேரெதிரே மோதியதில் அதில் பயணஞ்செய்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று காலை 10 மணியளவில் கிளிநொச்சி சிவன் கோயிலுக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இதேயிடத்தைச் சேர்ந்த நி.சதீஸ் (வயது 25) நி.பிரபா (வயது 22) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கிளிநொச்சி சிவன் கோயில் பகுதியில் மூவர் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த சமயம் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மேற்படி விபத்து ஏற்பட்டது.

விபத்தில் காயமடைந்த இருவரும் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிசசைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த விபத்து தொடர்பாக கிளிநொச்சி காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# தேர்தல் கடமையில் ஈடுபட்டவர்களுக்கு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை!

நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் கடமையில் ஈடுபட்ட அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை விரைவாக வழங்குவதற்கான நடவடிக்கையில் யாழ். தேர்தல் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

தேர்தல் கடமையில் ஈடுபட்ட அரச ஊழியர்களின் பதவிகள், அவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் குறித்த பட்டியல் திணைககளத் தலைவர்களுக்கு யாழ்.செயலகம் அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த அளவுகளுக்கு ஏற்ப சம்பள அளவுகள் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பட்டியல்களை பூரணப் படுத்தி தேர்தல் திணைக்களத்திற்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் கடமையில் ஈடுபட்ட ஊழியர்கள், அவர்கள் வகித்த பதவி, கடமையாற்றிய நேரம் அடங்கிய விபரங்களை பொறுப்பான அதிகாரிகள் தமக்கு அனுப்பி வைக்குமாறு திணைக்களத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# முன்பள்ளி மாணவர்களுக்கான சத்துணவு வழங்கல்!

(சாவகச்சேரி)

மட்டுவில் முன்பள்ளிகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு கியுமெடிக்கா நிறுவனம் சத்துணவுகளை வழங்கிவருகின்றது.

மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்குப் பகுதிகளில் உள்ள முன்பள்ளிகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கே இந்தச் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கப்படும் இந்த உணவுப்பொருட்கள் தற்போது வாரத்தில் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய மூன்று தினங்களில் வழங்கப்பட்டுவருகிறது.

பால், முட்டை, பிஸ்கட் போன்ற சத்துணவுப் பொருட்களே வழங்கப்பட்டு வருவதாக சனசமூக நிலையத்தின் தலைவர் க.பேரின்பநாதன் தெரிவித்தார். (24)

# சின்னஞ்சிறு செய்திகள்

### ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சிக் கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலை ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று காலை 8.30 மணி முதல் 5.00 மணிவரை வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் "தலைமைத்துவத்தில் ஆசிரியர்களுக்கான பயிற்சி" எனும் விடயம் தொடர்பான கருத்துக்கள் வழங்கப்படவுள்ளது. இச் செயலமர்வில் சகல ஆரம்பக் கல்வி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கேட்டுள்ளார். (25)

### அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் நுண்கலை வளாக அனைத்து மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் நாளை மதியம் 12 மணிக்கு நடனத்துறை வளாக நடேசன் அரங்கில் நடைபெறும். அனைவரையும் தவறாறு கலந்துகொள்ளுமாறு கவின்கலை மன்றத் தலைவர் கேட்டுள்ளார்.

### கிரிக்கெட் போட்டி

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வருகைதந்திருக்கும் வடதாரகை விளையாட்டுக் கழகத்திற்கும், யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான 50 ஓவர் ஒருநாள் கிரிக்கெட் போடடி ஒன்று இன்று காலை 9 மணி முதல் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (58)

### செயலாளர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி செயலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலின்போது - கடந்த கலந்துரையாடல்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் 2004 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கவிதைநூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

"கைக்குள் சிக்காத காற்று" கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் பிற்பகல் 4.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் இ.முருகையன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நூல் அறிமுகவுரையை பேராசிரியர் சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

க.வேல்தஞ்சன், பேராசிரியர் எஸ்.ஜெபநேசன், கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.


ராஜா யாழ்ப்பாணம்.

ஸ்ரீகாந்த் நடித்த

உன்னை பார்த்த நாள் முதல்...



காட்சி நேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

16 ஆம் திகதி முதல் விஜய் நடித்த

கில்லி

(சி-2387)

நாகம்ஸ் சுன்னாகம்

மூன்றாவது வெற்றிவாரமாக காட்சிப்படுத்தப்படுகிறது



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக விஜய், சிம்ரன், விவேக் தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடித்த

A.R. ரஹ்மானின் இசையில்

(சி-2397)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை

தனுஷ், சோனியா, நாகேஸ் நடித்த

காதல் கொண்டேன்

(சி-2386)

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00 (பு.நே.)

# ஜனாதிபதி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சிறுபான்மையினருக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும்

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி மேற்கொண்டுவரும் நடவடிக்கை சிறுபான்மை மக்களுக்குப் பாரிய தாக்கல்களை ஏற்படுத்தும் என முஸ்லிம்காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கண்டிக்குச்சென்ற ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் உடவத்த நந்தன தேரர், முஸ்லிம் காங்கிரஸ் கட்சிச் செயலாளர் ஹசன் அலி உட்பட ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தார்.

இதன்போது அவர்களுடன் பேசிய ரவூப் ஹக்கீம் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பின்போது ஹக்கீம் மேலும் கருத்துத் தெரி வித்தபோது -

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை முழுமையாக நீக்காது அதிலிருந்து சிறிய அம்சங்களை மட்டும் நீக்கிவிட்டு ஜனாதிபதி முக்கிய அம்சங்களை தம்வசம் வைத்திருக்கவேண்டும்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு பதில்சொல்லவேண்டிய அதேநேரம் நீதிமன்றத்திற்கு ஆஜராகக்கூடிய நிலை அரசியல் அமைப்பில் திருத்தம் செய்யப்பட்டு ஜனாதிபதி பதவி தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படுவதே சிறந்த வழியாகும் என முஸ்லிம் காங்கிரஸ் கருதுகிறது.

தேர்தல் முறைமையில் தற்போதைய விகிதாசார முறை மாற்றப்படுமாயின் நாடாளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமய, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய இருகட்சிகளின் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படும் எனத் தெரிவித்தார். (01)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில்

# 17 மாணவர்கள் மீதான தடையை நீக்காவிடின் தொடர் சத்தியாக்கிரகம்

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 17 மாணவர்கள் மீதான தடையை எதிர்வரும் 19 ஆம் திகதிக்குள் நீக்காவிடில், தொடர்ந்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபடவுள்ளதாக மாணவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உபவேந்தருக்குரிய அதிகாரங்களுக்கமைய பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையை உடனடியாக அழித்து, இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய வாய்ப்பிருந்தும், எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென பெற்றோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பல்கலைக்கழக ஆணைக்குழுவுடன் மாணவர் சங்கப் பிரதிநிதிகள் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாகத் தடைசெய்யப்பட்ட மாணவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தின்மூலம், மேன்முறையீட்டுச் சபையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சபை எதிர்வரும் 19 ஆம் திகதி தமது தீர்மானத்தைத் தெரிவிக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி பெற்றுக்கொடுக்கப்படும் தீர்மானத்துக்கமைய 17 மாணவர்களது தடையை நீக்க, நடவடிக்கை எடுக்காவிடின் அனைதது பீட மாணவர்களும் இணைந்து தொடர் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ரயில் சேவை அபிவிருத்திக்கு சீன அரசு உதவி நாடப்பட்டது!

## தூதரக அதிகாரி தகவல்

இலங்கையின் ரயில் சேவையை அபிவிருத்தி செய்யும் நேக்கத்துடன், அதற்கான கடன் உதவிகளை இலங்கை அரசு தம்மிடம் கோரியுள்ளதாக சீனக்குடியரசின் தூதரக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதனையடுத்து - சீனஅரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனம் ஒன்று துருப்பிடிக்காத இரும்பிலான ரயில் பெட்டிகளைத் தயாரித்து வழங்க விருப்பம் தெரிவித்துள்ளது.

சீன நிறுவனத்தின் இந்தத் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி, மேற்படி ரயில் பெட்டிகளை உருவாக்கும் முயற்சிக்கான, நிறுவனம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இந்தத் தொழில்நுட்ப நிறுவனம் தகுதிவாய்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்கவும், பயிற்சியளிக்கவும், முடிவு செய்துள்ளது எனவும் சீனத்தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தேசிய அரசை அமைப்பது குறித்து கொழும்பு அரசியலில் ஆராய்வு

இலங்கையில் தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பது குறித்து, பொதுவான கருத்துக்கள் உருவாக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்குள் இருக்கும் ஜே.வி.பி. பல்வேறு அழுத்தங்களை அரசுக்குக் கொடுத்து வருகின்றது.

இதன் காரணமாக அரசாங்கத்தை உரிய முறையில் கொண்டு செல்ல முடியாத நிலையொன்று உருவாகியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன இணைந்து, தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கலாமா என்பது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றன.

அத்துடன் - இது தொடர்பாக ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

ஏற்கனவே இவ்வாறான ஒரு முயற்சியில் ஈடுபட்டு, அதில் வெற்றி பெறாத நிலையிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த முடிவு செய்திருந்தார்.

தற்போது நாடாளுமன்றில் சிறுபான்மை அரசாங்கம் ஒன்றே பதவி ஏற்றிருக்கும் நிலையில், தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து உருவாகியிருக்கிறது.

இந்த விடயம் இனப்பிரச்சினைத் தீர்வில் கவனத்தை கொண்டுவந்துளளது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மத்திய அரசாங்கம் ஒரு வலுவான நிலையில் இருக்க வேண்டியது அவசியமானதொன்றாகும்.

இதன் காரணமாகவே இப்போது தேசிய அரசாங்கத்தை நிறுவ வேண்டும் என்ற கருத்து தீவிரமடைந்துப்பதாகவும் கூறப்படுகிறது. (01)

# போட்டியிட்ட192 சுயேட்சைக் குழுக்களில் 191 குழுக்கள் கட்டுப்பணத்தை இழந்தன

நடந்துமுடிந்த பதின் மூன்றாவது நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் நாடளாவியரீதியில் 22 தேர்தல் மாவட்டங்களில் போட்டியிட்ட 192 சுயேட்சைக் குழுக்களில் 191 சுயேட்சைக் குழுக்கள் தமது கட்டுப்பணத்தை இழந்துள்ளன.

இதனால் சுமார் முப்பது இலட்சம ரூபாவுக்கும் அதிகமான தொகை அரச உடமையாக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் போட்டியிட்ட சுயேட்சைக் குழு -1, 5156 வாக்குகளைப் பெற்றது. கொழுமபு மாவட்டத்தில் போட்டியிட்ட சுயேட்சைக் குழு - 77683 வாக்குகளைப் பெற்றது.

இவற்றைவிட பதுளை மாவட்டத்தில் சுயேட்சைக் குழுக்களில் 7 ஆம் இலக்க குழுவுக்கே 329 வாக்கு அதிகூடிய வாக்காகக் கிடைத்தது. நாடளாவிய ரீதியில் நடைபெற்ற தேர்தலில் 165 சுயேட்சைக் குழுக்களுக்கு 100 வாக்குகளுக்குக் குறைவாகவே கிடைத்துள்ளன.

பத்து வாக்குகளுக்கும் குறைவான வாக்குகளை 21 சுயேட்சைக் குழுக்கள் பெற்றுள்ளன. ஆகக் குறைந்த வாக்குகளைத் திகாமடுல்ல மாவட்டத்தில் 8 ஆம் இலக்கச் சுயேட்சைக்குழு 3 வாக்குகளைப் பெற்றுள்ளது.

நாடளாவியரீதியில் போட்டியிட்ட 192 சுயேட்சைக் குழுக்களிலும், 2377 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இலங்கை வரலாற்றில், இந்தமுறைதான் 190 இற்கும் மேற்பட்ட சுயேட்சைக் குழுக்கள் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

நாடளாவியரீதியில் சுயேட்சைக் குழுக்களின் தேர்தல் முடிவின்படி பெற்ற வாக்குகள் 0 வீதம் ஆகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மாவட்ட மட்டத்தின் எந்தவொரு ஆசனத்தையும் பெறாத கட்சியினதோ, சுயேட்சைக் குழுவினதோ விருப்பு வாக்கு எண்ணப்படாது என தேர்தல் ஆணையாளர் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவம் உற்பத்தி செய்த

# ஐந்து கவச வாகனங்கள் அதிரடிப்படையினரிடம் கையளிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் விசேட அதிரடிப்படையினரின் பாவனைக்காக இலங்கை இராணுவம் ஐந்து கவச வாகனங்களை உற்பத்திசெய்து வழங்கியுள்ளது.

தென்னாபிரிக்காவின் உற்பத்தி செய்யப்படும் பவல் கவச வாகனங்களை ஒத்த கவச வாகனங்களைளே இராணுத்தால் கொழும்பில் உற்பத்தி செய்யப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒவ்வொன்றும் 3 கோடி ரூபா பெறுமதியான இந்தக் கவச வாகனங்கள் இராணுவத்தின் மின் சார இயந்திர பொறியியலாளர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டது. 15 கோடி ரூபா மொத்த பெறுமதியைக் கொண்ட இந்த ஐந்து கவச வாகனங்களும் வடக்கு- கிழக்கு பகுதிகளில் விசேட அதிரடிப்படையினரால் பாவிக்கப்பட இருப்பதாக இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

மேலும் இந்த கவசவாகனங்கள் இன்று உத்தியோக பூர்வமாக பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியும், இராணுவத் தளபதியுமான லெப். ஜெனரல் லயனல்பலகல்லவினால் இராணுவ தலைமை அலுவலகத்தில், வைத்து அதிரடிப்படையினரிடம் கையளிக்கப்படும்.


விசேட அதிரடிப்படை கட்டளை அதிகாரி, பிரதி பொலிஸ் மா அதிபர் நிமால் லெகேயினால் இந்தக் கவச வாகனங்கள் கையேற்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அக்குரஸ்ஸவில் 2 வீடுகள் விஷமிகளால் தீவைத்து எரிப்பு

அக்குரஸ்ஸப் பகுதியில் இரண்டு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் ஆறு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ஏற்கனவே இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்றின் தொடர்ச்சியாகவே இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தச் சம்பவம் தொடர்பாக அக்குரஸ்ஸப் பொலிஸார் தீவிர விசாரனைகளை நடத்திவருகின்றனர். (01)







18 வயதிற்குக் குறைந்த போராளிகள் பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு கதிரவெளியில் இடம்பெற்றபோது பதிவுகளை யுனிசெப் அதிகாரி மேற்கொள்வதை முதற்படத்திலும், வீடுசெல்ல அனுமதிக்கப்பட்ட போராளிகள் மத்தியில் கௌசல்யன் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், யுனிசெப் வழித்துணையுடன் பஸ்ஸில் போராளிகளை ஏற்றிச் செல்வதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# பாகிஸ்தானுடனான இறுதி டெஸ்ட்
# இந்தியா 4 விக்கெட்டுகளுக்கு 342



இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ராவல்பிண்டியில் இடம்பெற்றுவரும் மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இரண்டாவது நாளான நேற்று ஆட்டநேர முடிவில் இந்திய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 342 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக முதலாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது 1 விக்கெட்டை இழந்து 23 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி இந்த ஓட்டத்தைப் பெற்றுக்கொண்டது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பார்த்தீவ் பட்டேலுடன் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த ராகுல் ராவிட் ஜோடி தமக்கிடையே 129 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பட்டேல் 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அதன்பின் வந்த டெண்டுல்கரும் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். பின்னர் ராவிட்டுடன் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த லக்ஷ்மன் ஜோடி சிறப்பாக விளையாடி 129 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் லக்ஷ்மன் 71 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பின்னர் ராவிட்டுடன் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த அணித்தலைவர் கங்கூலி ஜோடி தற்போது நல்ல முறையில் விளையாடி வருகிறது. இதில் ராவிட் ஆட்டமிழக்காமல் 314 பந்துகளில் 19 பவுண்டரிகள் அடங்கலாக 134 ஓட்டங்களையும், (பாகிஸ்தான் அணிக்கெதிராக ராவிட் பெற்ற முதல் சதம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது) கங்கூலி 53 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

பந்துவீச்சில் அக்தர் 3, பாசல்-இ - அக்பர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர்.

# வக்காரின் ஆலோசனை உதவியாக இருந்ததாம்!

## இந்திய பந்துவீச்சாளர் பாலாஜி



இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இதில் இடம் பெற்றுள்ள தமிழக வீரர் எல்.பாலாஜியின் பந்துவீச்சு பாராட்டும்படியாக உள்ளது.

வேகப்பந்து வீச்சாளரான பாலாஜி ஒருநாள் தொடரில் தனது முத்திரையைப் பதித்தார். நேற்றுமுன் தினம் தொடங்கிய கடைசி டெஸ்டில் அவரது பந்துவீச்சு அபாரமாக இருந்தது. பாலாஜி 63 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். தபீக் உமர், அசிம் கமால், அக்மல், சொகைப் அக்தர் ஆகியோரது விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

3 ஆவது டெஸ்ட் போட்டி தொடங்குவதற்கு முன்பு பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யூனுஸ் இந்திய வீரர்களுக்கு விருந்து கொடுத்தார். ஓய்வு பெற்றதையொட்டி அவர் இந்த விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

அப்போது பாலாஜிக்கு வக்கார் யூனுஸ் பந்துவீச்சு நுணுக்கம் குறித்து சில ஆலோசனைகளை வழங்கினார். யோக்கர், ரிவர்ஸ் சுவிங் எப்படி போடுவது என்பது உட்பட பல்வேறு நுணுக்கங்களை வக்கார் யூனுஸ் சொல்லிக்கொடுத்தார்.

வக்கார் யூனுசின் ஆலோசனை தனக்கு உதவியாக இருந்தது என்று பாலாஜி நேற்று ஆட்டம் முடிந்த பிறகு கூறினார். இது தொடர்பாக அவர் கூறும்போது - என்னால் நேர்த்தியான முறையில் பந்துவீச முடிந்தது. இதற்கு வக்காரின் ஆலோசனை உதவியாக இருந்தது என்றார்.

# இந்தியாவின் புகார் காரணமாக அக்தரின் பந்துவீச்சை பரிசோதிக்கவில்லை!

## ஐ.சி.சி. தெரிவிப்பு

பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர். இவரது பந்து வீச்சு எறியும் வகையில் உள்ளது என ஏற்கனவே பலமுறை குற்றஞ்சாட்டப்பட்டது. பின்னர் அவரது பந்துவீச்சு சரியாகத்தான் உள்ளது என்று சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்தியாவிற்கு எதிரான தொடரில் சொகைப் அக்தரின் பந்துவீச்சு சந்தேகம் அளிக்கும் வகையில் உள்ளதென்றும் அவரது பந்துவீச்சுக குறித்து பரிசோதிக்குமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு ஐ.சி.சி நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

இந்தியா தெரிவித்த புகாரின் அடிப்படையில்தான் ஐ.சி.சி இவ்வாறு உத்தரவிட்டிருப்பதாக தகவல் வெளியானது. இதை இந்திய கிரிக்கெட் சபை மறுத்துள்ளது.

# விளையாட்டு

## மேற்கிந்தியத் தீவுகளுடனான இறுதி டெஸ்ட்

# இங்கிலாந்து இரண்டாவது இனிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 145 ஓட்டங்கள்!

(அன்ரிகுவா)

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் அன்ரிகுவாவில் இடம்பெற்றுவரும் இறுதி டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து தனது இரண்டாவது இனிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 145 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக நான்காம் நாள் ஆட்டத்தில் 5 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களை முதல் இனிங்ஸில் பெற்ற இங்கிலாந்து அணி, பின்னர் வந்த பிளின்ரொப்பின் ஆட்டமிழக்காத 102 ஓட்டங்களால் சற்று கூடிய ஓட்ட எண்ணிக்கையை பெற்றது.

இங்கிலாந்து அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 285 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிளின்ரொப் ஆட்டமிழக்காமல் 102, ஜோன்ஸ் 38, மார்க் புட்சர் 52 ஆகியோர் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் கொலின்ஸ் 4, பெஸ்ட் 3, எட்வேட்ஸ் 2, ஹின்ட்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியை விட 466 ஓட்டங்களை தனது முதலாவது இனிங்ஸில் இங்கிலாந்து அணி குறைவாகப் பெற்றதனால் இரண்டாவது இனிங்ஸை தற்போது விளையாடி வருகின்றது. இதில் நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் அந்த அணி விக்கெட் இழப்பின்றி 145 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.



## மூன்று நாடுகள் பங்கேற்கும் மகளிர் கிரிக்கெட் போட்டி!

### 17 ஆம் திகதி ஆரம்பம்

(புதுடெல்கி)

3 நாடுகளுக்கிடையேயான மகளிர் கிரிக்கெட் போட்டி இலங்கையில் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை அணிகள் பங்கேற்கவுள்ளன.

எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை இந்தப் போட்டி நடைபெறவுள்ளது. போட்டி விபரம் வருமாறு -

ஏப் 17 இந்தியா - இலங்கை, ஏப் 19 இந்தியா - பாகிஸ்தான், ஏப் 21 இலங்கை - பாகிஸ்தான், ஏப் 23 இந்தியா - இலங்கை, ஏப் 25 இந்தியா - பாகிஸ்தான் ஏப் 27 இலங்கை - பாகிஸ்தான், ஏப் 29 இறுதிப்போட்டி.

# ஒரு நாள் போட்டிக்கு சந்திரபோல் இணைப்பு



இங்கிலாந்து கிரிக்கெட் அணி தற்போது மேற்கிந்தியத் தீவுகளில் டெஸ்ட் தொடரில் பங்குபற்றுகிறது. டெஸ்ட் தொடர் நேற்றுடன் முடிந்தது. இதன் பிறகு இரு அணிகளுக்கும் இடையே 7 ஒரு நாள் போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஒருநாள் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 4 ஆவது டெஸ்டில் நீக்கப்பட்ட சந்திரபோல் அணியில் மீண்டும் இடம்பெற்றுள்ளார்.

ஒருநாள் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி வருமாறு -

பிறைன் லாரா (அணித்தலைவர்), சர்வான், கெய்ல், சந்திரபோல், போவெல், ஸ்மித், ரேயான் ஹின்ட்ஸ், ஜோசப், ரிட்லி ஜேக்கப், பிரேவோ, பிரட்ஷா, திலான், ராம்பவுல், கொலிமோர்.

# ரஜினியை நம்பி தமிழர்களே ஏமாந்து போய் விடாதீர்கள்!

## வீரமணி எச்சரிக்கை

தமிழர்களே! ரஜினியின் பேச்சைக் கேட்டு ஏமாந்து விடாதீர்கள் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் மேலும் - சமீபத்திய பத்திரிகையாளர் சந்திப்பின்போது, ஊழலையும், வன்முறையையும் விரும்பாதவன் நான் என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட நடிகர் ரஜினி - பா.ஜ.கவை ஆதரிக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்.

பா.ஜ.கவை ஆதரிப்பது என்ற முடிவை எடுத்துவிட்டு அதற்கான காரணத்தை பின்னால் கண்டுபிடித்துக் கூறியிருக்கிறார் நடிகர் ரஜினி.

யாருக்கு வாக்களிப்பது என்பது அவரவர் உரிமை. அதை யாரும் மறுக்கமுடியாது. அதேபோல வன்முறையை பா.ம.க செய்தாலும், பா.ஜ.க செய்தாலும் அதை ஏற்க முடியாது.

குஜராத் மதக் கலவரத்தில் நடந்த கொலைகள் தொடர்பான விசாரணையை நரேந்திர மோடியின் பா.ஜ.க அரசு சரியாக நடத்தவில்லை என்று சொல்லி, அந்த வழக்கையே மகாராஷ்டிரத்துக்கு மாற்றியிருக்கிறது உச்சநீதிமன்றம். வன்முறையை நடத்தியதே பா.ஜ.கவினர்தான் என்பதால் விசாரணையைத் திசை திருப்பிக் கொண்டு சென்றார் மோடி.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் வன்முறையாளர்கள் அணி எது என்பது தெள்ளத்தெளிவாகி விட்டது. அதேபோல பாபர் மசூதியை இடித்து இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ரத்த ஆறு ஓட விட்டு அதன் பின்னர் வன்முறைகளுக்கு வித்திட்டதும் பா.ஜ.கவினர்தான்.

பின்னர் தங்கள் ஆட்சியும், அதிகாரமும் வந்தவுடன் அந்த வழக்கிலிருந்து விடுவித்துக் கொண்டவர்கள் யார் (அத்வானி) என்பதை நாடறியும்.

ரஜினியின் வன்முறை பற்றிய இலக்கணமே விநோதமானது என்பதற்கு அவரது அறிக்கையே சான்று. அடித்தால் திருப்பி அடிப்போம் என்பதுதானே அவரது தத்துவம். அது வன்முறை இல்லையா? சட்டத்தை நாடவேண்டிய ஒருவர் சட்டத்தைத் தனது கையில் எடுப்பது நியாயமா?

வரும் தேர்தலில் முக்கிய கேள்வி இதுதான். மக்களின் அமைதி வாழ்வு, சக வாழ்வு, நல்லிணக்க வாழ்வு, தேவையெனில் மதசார்பில்லாத அணியே வெல்லவேண்டும்.

இதனால் தமிழர்களே ஏமாந்து விடாதீர்கள் என்று வீரமணி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தேர்தலில் 276 ஆசனங்களை பாரதீய ஜனதாக் கட்சி பெறும்!

## அவுட் லுக் கருத்துக்கணிப்பு கூறுகிறது

பாரதீய ஜனதா கூட்டணிக்கு 276 தொகுதிகளும், காங்கிரஸ் கூட்டணிக்கு 166 தொகுதிகளும் கிடைக்கும் என்று கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சி ஆட்சியைப் பிடிக்கும் என்று பல கருத்துக் கணிப்புகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

நேற்றுமுன்தினம் 2 கருத்துக் கணிப்புக்கள் வெளியிடப்பட்டன. அவுட் லுக் என்ற ஆங்கில பத்திரிகைக்காக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில் பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி பெரும்பான்மை இடங்களைப் பெற வாய்ப்பிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்ரல் இந்தியா நியூஸ் சேர்விஸ் என்ற செய்தி நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பில் இழுபறி நிலை ஏற்பட்டு தொங்கு நாடாளுமன்றம்தான் அமையுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அவுட் லுக் இதழில் வெளியாகியிருக்கும் கருத்துக் கணிப்பில் - பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 276 இடங்கள் கிடைக்கும். அதில் பாரதீய ஜனதா மட்டும் 197 தொகுதிகளில் வெற்றிபெறும்.

வாஜ்பாய் மீண்டும் பிரதமராக 61 சதவீத ஆதரவு இருக்கிறது. தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மீண்டும் வாய்ப்பளிக்க 66 சதவீதம் பேர் ஆதரவு தெரிவிக்கிறார்கள்.

காங்கிரஸ் கூட்டணி 166 இடங்களில் வெற்றிபெறும். காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் 101 இடங்கள் கிடைக்கும். கடந்த தேர்தலைவிட 13 தொகுதிகள் குறையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ரல் இந்திய நியூஸ் சேர்விஸ் என்ற செய்தி நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பு வருமாறு-

தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 231 இடங்கள் மட்டுமே கிடைக்கும். அதில் பாரதீய ஜனதாவுக்கு மட்டும் 164 இடங்கள் கிடைக்கும்.

காங்கிரஸ் 148 இடங்களில் வெற்றிபெறும்.

இடதுசாரிகள், சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ் போன்ற கட்சிகள் 104 இடங்களைக் கைப்பற்றும். இதனால் தொங்கு நாடாளுமன்றமே அமையும்.

வாஜ்பாய் பிரதமராக 39 சதவீத ஆதரவும், சோனியா பிரதமராக 32 சதவீத ஆதரவும் இருக்கிறது எனக் கூறப்பட்டுள்ளது.

மேற்கண்ட கருத்துக்கணிப்பு 126 நாடாளுமன்றத் தொகுதிகளில் 23 ஆயிரத்து 814 பேரிடம் எடுக்கப்பட்டது.

# மதுபோதையில் வாகனம் செலுத்துவதாலேயே யாழ். குடாநாட்டில் அதிகளவில் விபத்துக்கள்

## போக்குவரத்துப் பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மதுப் பாவனையாளர்கள் வாகனம் செலுத்துவதாலேயே குடாநாட்டில் அதிக விபத்துக்கள் இடம்பெறுவதாக யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது -

அண்மைக் காலமாக யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற பல விபத்துக்களுக்கு சாரதிகளின் அலட்சியப் போக்கே காரணமாக அமைந்துள்ளது. அதிலும், குறிப்பாக சாரதிகள் மது அருந்திவிட்டு வாகனங்களைச் செலுத்தியதாலேயே விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

கொண்டாட்டங்கள் மற்றும் களியாட்ட நிகழ்வுகளில் கலந்துகொண்டு மது அருந்துவோர் வாகனம் செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அடுத்தவர் உயிரில் அக்கறை இல்லையாயினும் தமது உயிர்களிலாவது அக்கறை கொண்டு மதுப் பாவனையாளர்கள் வாகனம் செலுத்துவதைத் தவிர்ப்பது நல்லது.

கடந்த வருடம் முதல் நாம் மது போதையில் வாகனம் செலுத்துவோர் மீது நீதிமன்றத்தின் ஊடாகக் கடும் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளோம். எனினும், நேற்றுமுன்தினம் புதுவருடக் கொண்டாட்டத்தில் கலந்துவிட்டுக்கூட பலர் மது அருந்திய நிலையில் வாகனங்களைச் செலுத்திச் சென்றதைக் காணமுடிந்தது.

இவ்வாறான செயல்களை மக்கள் தாமாக முன்வந்து தடுத்துக் கொள்ளவேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

# உள்ளூர்ச் செய்திகள்

## அகதிகளுக்கான வீட்டு மானிய கொடுப்பனவு நிதியில் மோசடி

யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் ரத்மல்யாயவில் தற்காலிகமாக வாழ்ந்துவரும் அகதிகளுக்கு வழங்கப்படவேண்டிய வீட்டு மானியக் கொடுப்பனவு நிதியில் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச் சாட்டை புத்தளம் ரத்மல்யாய மக்கள் சுமத்தியுள்ளனர். இது தொடர்பாக அவர்கள் ஜனாதிபதி சந்திரிகாவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

புத்தளம் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள ஹிஜ்ரத்புர கிராமத்தில் சுமார் 160 இடம்பெயர்ந்த குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவற்றில் 30 குடும்பங்களுக்கு மட்டுமே காணிகள் பெற்றுக்கொள்வதற்காக சுமார் 25 ஆயிரம் ரூபாவுக்குக் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும், கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் பின்னர் காசோலைகள் மக்களிடம் இருந்து மீளப் பெறப்பட்டுள்ளதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். எனவே, இது தொடர்பான விசாரணைகளை மிக விரைவில் மேற்கொள்ளவேண்டும் என, யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து இரத்மல்யாயவில் வசிக்கும் அகதிகள் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளனர்.

# அரியாலை யூதாததேயு ஆலய திருவிழா 25 ஆம் திகதி ஆரம்பம்

அரியாலை புனித யூதாததேயு யாத்திரைத் தல திருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. நவநாள் வழிபாடுகள் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளன.

அதனடிப்படையில், 'பெற்றோர்களே பிள்ளைகள் உங்கள் கரங்களில்' என்னும் கருப்பொருளில் பாசையூர் புனித அந்தோனியார் பங்கும். சனிக்கிழமை 'தியாக தீபமே குடும்பம்' என்னும் கருப்பொருளில் பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் பங்கும், ஞாயிற்றுக்கிழமை அன்று 'இரு உள்ளங்களின் சங்கமமே திருமணம்' என்னும் கருப்பொருளில் சுண்டுக்குழி புனித யுவானியார் ஆலய பங்கும், 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 'மகிழ்ச்சியே குடும்பத்தின் நிறைவு' என்னும் கருப்பொருளில் கொழும்புத் துறை புனித செபமாலை மாதா பங்கும், மறுநாள் சனிக்கிழமை 'குடும்ப வாழ்வை வலுவூட்டும் நற்கருணை' என்னும் கருப்பொருளில் அரியாலை புனித யூதாததேயு பங்கும், நவநாள் வழிபாடுகளும் மேற்கொள்ளவுள்ளன.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும். திருவிழாத் திருப்பலி காலை 7.15 மணிக்கு யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதனைவிட யாழ். பேரன்பு நிலையத்தில் இருந்து யுதாதேயு ஆலயத்திற்கு தினமும் போக்குவரத்து மேற்கொள்ளப்படவுள்ளது என ஆலய பரிபாலகர் தெரிவித்தனர்.

19 ஆம் திகதி திங்கட்கிழமை 'அன்பில்லங்களின் விளைநிலம் குடும்பம்' என்னும் கருப்பொருளில் புனித யாகப்பர் பங்கும் மறுநாள் செவ்வாய்க்கிழமையன்று 'தாய் உயர' என்னும் கருப்பொருளில் நாவற்குழி புனித அந்தோனியார் ஆலயமும்,

21 ஆம் திகதி புதன் இளமையே நீ இறைவனைத் தேடு என்னும் கருப்பொருளில் புனித பேராலயப் பங்கும், 22 ஆம் திகதி 'மன்னிப்பில் மலரும் குடும்பம்' என்னும் கருப்பொருளில் புனித மரியன்னை பேராலயப் பங்கும் நவநாள் வழிபாடுகளை நடத்தவுள்ளனர்.

## புதுவருட தினத்தன்று விபத்துக்களில் சிக்கிய 129 பேர் தேசிய வைத்தியசாலையில் அனுமதி

புதுவருட தினத்தன்று இடம்பெற்ற திடீர் வீதி விபத்துக்களினால் காயமடைந்த 229 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஹெட்டர் வீரசிங்க தெரிவித்தார்.

புதுவருட தினத்தை முன்னிட்டு இந்த முறை எவ்வாறான விபத்துக்கள் அதிகம் நடைபெற்றுள்ளன என தொலைக்காட்சி ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

வீதி விபத்துக்கள் கடந்த ஆண்டைப் போலவே இந்தமுறை இடம்பெற்றுள்ளன. ஆனால், வெடி கொழுத்தி புத்தாண்டு கொண்டாடிய போது ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தப் பட்டாசு விபத்து சென்ற முறையை விட மிகக் குறைவாக இருந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பட்மின்ரன் சுற்றுப்போட்டிக்கான அணிகள் தெரிவுசெய்யப்பட்டன

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட பட்மின்ரன் ஆண், பெண்கள் அணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தத் தெரிவிற்கான போட்டிகள் - 9 ஆம், 10 ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

முதல் போட்டி தெரிவில் ஆண்களுக்கான போட்டிகள் இடம்பெற்றன. இதில் இறுதியாட்டத்தில் மானிப்பாய் பரிஸ் அணியும், யாழ். பல்கலைக்கழக அணியும் மோதின. இவற்றுள் மானிப்பாய் பரிஸ் அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதுடன், இந்த மாத இறுதியில் திருமலையில் நடைபெறவுள்ள மாகாணப் போட்டியிலும் பங்குபற்றவுள்ளது.

அடுத்து பெண்களுக்கான தெரிவு இடம்பெற்றது. இதில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியும், உடுவில் மான்ஸ் பாடசாலை அணியும் மோதின. இவற்றுள் உடுவில் மான்ஸ் அணி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டதுடன் இந்த மாத இறுதியில் திருமலையில் இடம்பெறவுள்ள மாகாணப் போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளது.

(205)

## புத்தாண்டு தினத்தன்று தென்மராட்சி உயர் பாதுகாப்புப் பகுதியில் 11 குடும்பங்கள் மீளக்குடியமர அனுமதி

### படைத்தரப்பினால் வழங்கப்பட்டது

(தென்மராட்சி)

தென்மராட்சி தெற்கின் அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் - மக்களைப் படிப்படியாக மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளை யாழ். படைத் தலைமையகம் ஆரம்பித்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக தமிழ் - சிங்களப் புத்தாண்டு தினத்தன்று தென்மராட்சி தெற்கின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளடக்கியுள்ள சில கிராமங்களில் ஒரு தொகுதி குடும்பங்களை படைத்தரப்பு மீளக் குடியமர்த்தியுள்ளது.

இராணுவப் பாதுகாப்பு வேலிகளை அண்டியதாக உள்ள மறவன்புலோ கிராமத்தில் 6 குடும்பங்களும், இதேபோன்று கைதடி நாவற்குழியில் 5 குடும்பங்களுமாக 11 குடும்பங்களே இவ்வாறு மீளக் குடியமர்ந்துள்ளனர்.

இதேவேளை உயர்பாதுகாப்பு வலயப்பகுதிகளில் அமைந்துள்ள தனங்களப்புப் பகுதியில் இருந்து வெளியேறியுள்ள 150 குடும்பங்களில் எவையும் தற்போது மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை.

அதேபோன்ற உயர்பாதுகாப்பு வலயத்தைக் காரணம் காட்டி மீளக் குடியமர அனுமதிக்கப்படாத 12 குடும்பங்களையும், கரையோரக் கிராமமான கோயிலாக்கண்டி பகுதிகளில் மீளக்குடியமர அனுமதிப்பதாக படைத்தரப்பால் கூறப்பட்டிருந்த போதும் அந்தக்குடும்பங்களும் தற்போது மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இதனிடையே இந்தப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களின் 10 குடும்பங்களை படையினரே மீளக்குடியமர அனுமதிக்கப்போவதாக படைத்தரப்பு அறிவித்திருந்தது.

(202)

# சின்னஞ்சிறு செய்திகள்

### ஒருவழிக் கட்டணமாக முப்பது ரூபா அறவிடப்பட்டதாம்

(யாழ்ப்பாணம்)

தனியார் சிற்றூர்தி வாகனம் ஒன்று கடந்த திங்கட்கிழமை சுன்னாகத்திலிருந்து மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்குச் செல்ல தனியொருவருக்கு ஒரு வழிப்பாதைக் கட்டணமாக 30 ரூபா அறவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசேவைக்கு இ.போ.சபை பஸ் வண்டிகளில் 11 ரூபா 50 சதமே அறவிடப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (206)

### கிறிஸ்தவ பாட மீட்டல் கருத்தரங்கு

க.பொ.த உயர்தரத்தில் கிறிஸ்தவ பாடத்திற்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச மீட்டல் கருத்தரங்கு நாளையும், நாளை மறுதினமும் யாழ். பேராலயத்திற்கு அருகில் உள்ள அகவழிக் குடும்ப வளத்துணை நிலையத்தில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது.

### சிகையலங்கரிப்பு கட்டணம் அதிகரிப்பு

நேற்று முதல் சிகை அலங்கரிப்பு கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் அறிவித்துள்ளது. அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்படும் இரண்டாவது தடவையான கட்டண அதிகரிப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது. (206)

### முகமாலையில் சோதனை அதிகரிப்பு

முகமாலை இராணுவ சோதனைச் சாவடியில் படையினரின் கெடுபிடிகள், சோதனைகள் அதிகரித்துள்ளன. உடமைகளும் வாகன ஆவணங்களும் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பெருநிலப்பரப்புக்குச் சென்று வருவோர் மீது, குறிப்பாக இளைஞர்களை இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் தீவிரமாக விசாரணை செய்யப்படுவதுடன் அவர்களைப் பற்றிய விபரங்களும் புலனாய்வு அதிகாரிகளால் திரட்டப்படுகின்றன. (111)

## வீதிகளுக்கு மின்விளக்குகள் பொருத்த சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை

(சாவகச்சேரி)

கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் பெரும் பாதிப்புகளுக்குள்ளாகியுள்ள சாவகச்சேரி நகர் மற்றும் அண்டிய பகுதிகளில் வீதி மின்விளக்குகளைப் பொருத்த - சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கையின் முதற்கட்டமாக சுமார் இருநூறு வீதி மின்விளக்குகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில், முழுமையான மின்சார விநியோகம் வழங்கப்பட்ட பகுதிகளிலும், கண்டி வீதியோரங்களிலுமே இந்த வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளது.

இதற்கான நிதி ஒதுக்கீட்டை 'யாழ். மாவட்ட துரித அபிவிருத்தித் திட்டம் - 2004' எனும் திட்டத்தின் கீழ் யாழ். அரச அதிபர் வழங்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது. இந்தத் துரித அபிவிருத்தித் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒரு மில்லியன் ரூபா - வீதி விளக்குகள் பொருத்தும் நடவடிக்கைக்கு ஒதுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, இந்த வீதி விளக்குகளைப் பொருத்தும் பணி, இலங்கை மின்சாரசபை ஊடாகவே முன்னெடுக்கப்படலாமெனவும் தெரிவிக்கப்படுகிறன.

இதேவேளை, 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக இந்தப் பகுதிகளுக்கான வீதி விளக்குகள் செயலிழந்து போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ஜெ.வீனிஷா

முகவரி : இணுவில் மேற்கு (கனடா)

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்



## தொழில் மலர்



செழியன்

# ஆர்வமில்லாத தொழிலில் ஈடுபடுவது நேரத்தையும் தொழிலின் சிறப்பையும் வீணடிப்பதாக அமையும்!

சூராவத்தை சுன்னாகம் பகுதியில் தும்புத்தடி மற்றும் விளக்குமாறு போன்ற பொருட்களை நீண்டகாலமாக உற்பத்தி செய்துவரும் செழியன் என அழைக்கப்படும் இரத்தினம் நெடுஞ்செழியன் என்பவரை அவரது தொழில் சம்பந்தமாக அறிந்துகொள்வதற்காகச் சந்தித்தோம். தனது வேலைகளில் சிரத்தையாக ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதும், எம்மை அழைத்துச் சென்று தனது வீட்டோடு அமைக்கப் பட்டிருந்த தொழிற்கூடத்தைக் காட்டினார்.

ஒரு பக்கத்திலே நன்றாகப் பதப்படுத்தப்பட்ட மென்மையான தென்னந்தும்புக் குவியலும், மறுபக்கத்தே நன்றாக வார்ந்தெடுக்கப்பட்ட ஈர்க்குக் கட்டுக்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மறுபுறத்தில் அழகாகச் சீவப்பட்ட தடிகள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன.

தொழிற்கூடத்தின் ஒரு பக்கத்தில் இருந்தவாறு செழியனுடன் உரையாடத் தொடங்கினோம்.

நான் எனது பாடசாலைப் படிப்பை நிறுத்தியது முதல் இத்தொழிலைச் செய்துவருகின்றேன். அதாவது, 1993 ஆம் ஆண்டிலிருந்து இத்தொழிலைச் செய்துவருகின்றேன். எனது மாமா பாலசிங்கம் ஒரு தச்சுத் தொழிலாளி. அவர் 1993 ஆம் ஆண்டுக்கு முன்னர் 20 வருடங்களாக பகுதிநேரத் தொழிலாக இத்தொழிலைச் செய்துவந்தார். அக்காலப் பகுதியில் நான் சிலசமயங்களில் மாமாவுடன் இணைந்து தொழிலில் ஈடுபட்டுவந்தேன், 1993 ஆம் ஆண்டின் முற்பகுதியில் மாமா இத்தொழிலைக் கைவிட்டுவிட்டார். இக்காலப்பகுதியில் நான் வேலை வாய்ப்புக்களைத் தேடி அலைந்துகொண்டிருந்தேன். நாட்டில் யுத்தம் இடம் பெற்றுக்கொண்டிருந்த இக்காலப்பகுதியில் ஒரு தொழிலைப் பெற்றுக்கொள்வது மிகவும் கடினமாக இருந்தது. மற்றும் ஒரு தொழிலைச் செய்வதாயின், ஓரளவாயினும் முதல் அவசியம். எனவே, எனது அப்போதைய சூழ்நிலை காரணமாகவும், எனக்கு இத்தொழிலிலிருந்த ஓரளவு அனுபவம் காரணமாகவும், 1993 ஆம் ஆண்டு முதல் இத்தொழிலைச் செய்து வருகிறேன்.

ஆரம்பத்தில் தும்புத்தடி மட்டுமே உற்பத்தி செய்து வந்தேன். எம்மிடம் தும்புத்தடிகளைக் கொள்வனவு செய்வோர் விளக்குமாறினையும் செய்து தரும்படி கேட்டுக் கொண்டதால் விளக்குமாறினையும் உற்பத்தி செய்ய ஆரம்பித்தேன்.

ஆரம்பகாலங்களில் நான் மட்டுமே தனித்து உற்பத்திகளை மேற்கொண்டு வந்தேன், நானே கொண்டுசென்று கடைகளுக்குக் கொடுத்தும் வந்தேன். ஆரம்பத்தில் சந்தைப் படுத்துவதில் சில சிரமங்களை எதிர் நோக்கினாலும், காலப்போக்கில் எனது உற்பத்திப் பொருட்களின் தரம் காரணமாக பலர் தாமாகவே முன்வந்து என்னிடம் கொள்வனவு செய்தார்கள். எனது உற்பத்திப் பொருட்களைப் பலரும் முன்வந்து கொள்வனவு செய்தமையால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக தொழிலாளர்களை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் என்னுடன் 15 தொழிலாளர்கள் வேலை செய்தார்கள். ஆனால், இப்பொழுது மூவரே வேலை செய்கின்றனர். இதற்கு காரணம் தற்பொழுது ஏனைய வேலைகளிற்கான சம்பளம் அதிகமாகும். உதாரணமாக ஒரு மேசன் வேலை செய்யும் தொழிலாளிக்கு 35 ரூபா முதல் 400 ரூபா வரை சம்பளம் வழங்கப்படுகின்றது. இந்த அளவிற்கு என்னால் சம்பளம் வழங்கமுடியாது. எனவே, அதிகளவு தொழிலாளர்களை ஈடுபடுத்த முடியாதுள்ளது.

எனது உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை அதாவது - ஈர்க்கு, தும்பு, தடி போன்றவற்றைப் பல்வேறு இடங்களிலிருந்தும் பெற்றுக்கொள்கின்றேன். இதற்கான முகவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் ஊடாகப் பெற்றுக்கொள்வேன். தும்பினை - பெரும்பாலும் கொழும்புத்துறைப் பகுதியிலிருந்தும், ஈர்க்கினை- தென்மராட்சி மற்றும் புத்தளம் பகுதியிலிருந்தும், தடிகளை அளவெட்டி, இளவாலை போன்ற இடங்களிலிருந்தும் பெற்றுக்கொள்கின்றேன். பழைய தகரரின்களை சில வியாரிகள் எனது தொழிற் கூட்டத்திற்கு கொண்டுவந்து தருவார்கள்.

தொழிலை ஒவ்வொருவரிடமும் பிரித்துக்கொடுத்துள்ளேன். இதனால், நேரம் மிச்சப்படுத்தப்படுவதோடு, குறிப்பிட்ட தொழிலாளி சிறப்புத்தேர்ச்சியும் அடைகின்றார். இப்போது நாம் எதிர்நோக்கும் பிரச்சினையாதெனில் - தடிகள் பற்றாக்குறையாக உள்ளது. சில சமயங்களில் தடிகள் போதியளவு இன்மையால் ஒருசில நாட்களிற்கு உற்பத்தியை இடைநிறுத்த வேண்டி ஏற்படுகின்றது.

ஒரு நாளிற்கு சுமார் 50 தும்புத்தடிகளும், 50 விளக்குமாறுகளும், உற்பத்தி செய்கின்றோம். தற்பொழுது எம்மைப் பொறுத்தவரையில் சந்தைப்படுத்தல் ஒரு பிரச்சினையாக இல்லை. காரணம் எமக்கு முன்கூட்டியே கொள்வனவிற்கான முற்பதிவுகள் வருகின்றன. யாழ். நகரப் பகுதியிலுள்ள பிரபல்யமான கடைகள், கூட்டுறவுச் சங்கங்கள், சுகாதாரத் திணைக்களங்கள் என்பன எம்மிடமே கொள்வனவு செய்கின்றன. இவற்றைவிட சில முகவர்கள எம்மிடம் கொள்வனவு செய்து குடாநாட்டின் பல பகுதிகளிற்கும் விநியோகம் செய்கிறார்கள்.

தற்போது சில நிறுவனங்களால் பிளாஸ்ரிக் பொருட்களால் இத்தகைய பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும், அவை எமது பொருட்களின் விற்பனையைப் பாதிப்பதில்லை. பிளாஸ்ரிக் பொருட்களைவிட நாம் உற்பத்தி செய்யும் பொருட்களால் கூட்டுவது சுலபமாகும். இதற்கேற்றவாறு நாம் தும்பினை அடர்த்தியாக வைத்தே தும்புத்தடிகளை உற்பத்தி செய்கின்றோம். எமது வாடிக்கையாளர்கள் எமது பொருட்களோடு அதிகம் பழகிவிட்டதாலும் ஒப்பீட்டு ரீதியில் எமது பொருட்கள் மலிவாக இருப்பதாலும் எமது உற்பத்திகளையே விரும்பிக் கொள்வனவு செய்கின்றனர். ஆனாலும், தற்போது பலரும் இத்தொழிலில் ஈடுபட்டுவருவதால் நிறைபோட்டி ஏற்பட்டுள்ளது. எனவே, உற்பத்தி பொருட்களின் தரத்தினை அதிகரித்து எமது பொருட்களிற்கான கேள்வியை தக்கவைத்துள்ளோம்.

எனது உற்பத்தி முறையில் தேவைக்கு ஏற்ப புதிய நுட்பங்களைக் கையாள்கின்றேன். ஆரம்பத்தில் தும்புத்தடிகளை கயிற்றினால் வரிந்துகட்டியே உற்பத்திசெய்தோம். தற்பொழுது தகரத்தினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்கின்றோம். எதிர்காலத்தில் தடிகளைச் சீவும் இயந்திரம் ஒன்றினைக் கொள்வனவு செய்யவுள்ளேன். இந்த இயந்திரத்தை கொள்வனவு செய்தால் உற்பத்தியினை துரிதமாக மேற்கொள்ள முடியும்.

தற்பொழுது வங்கிகளில் கடன்களைப் பெறுவதும் சிக்கலாகவுள்ளது. நான் தொழிலை விஸ்தரிப்பதற்காக மக்கள் வங்கியிடம் கடனுக்கு விண்ணப்பித்தேன். அவர் இரண்டு அரச உத்தியோஸ்தர்கள் பிணையில் கையொப்பமிட வேண்டும் எனத் தெரிவித்தனர். இதனால் என்போன்ற பலர் பாதிக்கப்படுகின்றனர். வங்கி அதிகாரிகள் சுலபமாக கடன்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து எம் போன்றவர்களுக்கு ஒத்தாசை வழங்கவேண்டும்.

இன்றைய இளைஞர்களைப் பொறுத்தவரையில் சொகுசு வாழ்க்கைக்குப் பழகிவிட்டார்கள். அவர்களிற்கு உழைக்க வேண்டும் என்ற தேவையில்லை. காரணம் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் ஒரு குடும்பத்தில் ஒருவராவது வெளிநாட்டில் உள்ளார். அவர்களது பணத்தில் இவர்கள் சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர். இவர்களது பார்வையில் அரச உத்தியோகங்களும் தனியார் நிறுவனங்களில் கதிரைகளில் அமர்ந்து செய்யும் வேலைகளுமே உயர்ந்தது என்ற எண்ணம் நிலவிவருகின்றது. இந்த மனப்பாங்கு மாற்றப்பட வேண்டும்.

எந்தத் தொழிலானாலும் அதில் விருப்புடன் ஈடுபட வேண்டும். ஒரு தொழிலில் விருபபும், ஆர்வமும் இருந்தால்தான அந்தத் தொழிலில் சிறப்புத்தேர்ச்சி அடையமுடியும் விருப்பமின்றி ஒரு தொழிலில் ஈடுபடுவது நேரத்தையும் அத்தொழிலின் சிறப்பை வீணடிப்பதாக அமைந்துவிடும்.

என்னைப் பொறுத்தவரையில் இப்படியான தொழில்களிற்கு திறமை என்பதைவிட, அவசியமானது பொறுமையே ஆகும். பொறுமை இல்லாவிட்டால் இத்தொழிலைச் செய்யமுடியாது. காரணம் காலை முதல் மாலைவரை ஒரே இடத்திலிருந்து செய்கின்றோம். பொறுமை இருந்தால்தான் அழகாகவும், தரத்துடனும் உற்பத்தி செய்யமுடியும் திறமை என்பது காலப்போக்கில் தானாக ஏற்படும்.

எமது நாட்டின் ஏனைய மாவட்டங்களில் சிறுகைத் தொழிலுக்கு வழங்கப்படும் வாய்ப்புக்கள், வசதிகள் எமக்கு கிடைப்பதில்லை. அவற்றைப் போன்று எமக்கும் வசதி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டால் மேலும், புதிய உற்பத்திகளில் நாம் ஈடுபடமுடியும் என புன்சிரிப்போடு கூறிமுடித்தார்.

**நேர்காணல் - லெஸ்லி**

## தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | முடிவு திகதி |
|---|---|---|---|
| இலங்கை கட்டடக்கலை நிலையம் 120/7 வித்யா மாவத்தை கொழும்பு - 07 | பதிவாளர் | கலைமாணி அல்லது விஞ்ஞான மாணிப் பட்டதாரி. ஆங்கில, கணினி அறிவு. பொதுநிர்வாக முகாமைத்துவத்தில் அனுபவம். | 10.05.2004 |
| கிழக்குப் பல்கலைக்கழகம் வந்தாறுமூலை செங்கலடி. | மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம், தமிழ்) | ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் சிறந்த புலமை. கல்வித்துறையில் மொழிபெயர்ப்பு அனுபவம். | 30.04.2004 |
| ஜப்பானிய தூதராலயம் 20, கிறிகொறைஸ் வீதி, கொழும்பு - 7. | நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர். | சமூக விஞ்ஞானத்துறையில் பட்டப் பிற்படிப்பு, திட்ட முகாமைத்துவ அனுபவம். | 30.04.2004 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

## வாரம் ஒரு சிறுகைத்தொழில்

# வாசனை விபூதி தயாரிக்கும் முறை

அநேகமாக செலவே இல்லாமல் தயாரிக்கக்கூடிய பண்டமும், பெருமளவில் விற்பனையாகக்கூடியதும் விபூதியே.

தெய்வத்திருத்தலங்களில் நடக்கும் திருவிழாக்களுக்கு இலட்சக்கணக்கில் வரும் மக்கள்வீடு திரும்பும்போதும் ஞாபகார்த்தமாக வாங்கிச்செல்லும் பண்டங்களில் வாசனை விபூதியும் முக்கியமான ஒன்றாகும்.

வீட்டிலும் தெய்வ நம்பிக்கை உடையவர்கள் வாசனை விபூதியை விரும்பிப் பயன்படுத்துவது வழக்கமாக இருக்கிறது. அதனால், இதன் விற்பனை குறித்து ஐயுறத் தேவையில்லை. வாசனை விபூதி தயாரிப்பதற்கு முக்கியமாகத் தேவையான அளவு பசுவின் சாணத்தைச் சேகரித்துக்கொள்ளவேண்டும்.

சாணத்தைக் கைபிடியளவு சிறுசிறு உருண்டைகளாக உருட்டிக் காயவைக்கவேண்டும். நன்கு காய்ந்தபிறகு சாண உருண்டைகளை ஓரிடத்தில் நெருக்கமாக ஒன்றன்மேல் ஒனறாகக் குவியலாக அடுக்கி, ஒரு பகுதியில் தீயிடவேண்டும்.

சாண உருண்டைகள் நிதானமாக உள்ளுக்குள்ளேயே எரியத்தொடங்கும். சிலசமயம் இரண்டு மூன்று நாட்களுக்குக்கூட எரியக்கூடும். சாண உருண்டைகள் முற்றிலுமாக எரிந்து அடங்கிய பிறகு, அவற்றின் மேற்புறம் கறுப்பாக இருந்தால், அவற்றை மட்டும் இலேசாக அகற்றிவிட்டால், உட்புறமாக வெண்மையான விபூதி இருப்பது புலப்படும்.

அவற்றைத் தூள் செய்துகொள்ளவேண்டும். பிறகு நல்ல தரமான மணமுள்ள பன்னீர் ஒரு போத்தல் வாங்கி விபூதித் தூள்மீது நன்றாகத் தெளிக்கவேண்டும். பன்னீர்த் துளிகள் பட்டதும் விபூதி சில சமயம் சிறு சிறு கட்டிகளாக ஆகக்கூடும். அவற்றை மறுபடியும் தூளாக்கி மெல்லிய கண்களுடைய அரிதட்டினால் அரித்துக்கொள்ளவேண்டும்.

நாம் நிர்ணயிக்கும் விலைக்கு ஏற்ப சிறு சிறு பைகளில் வீபூதியை அடைத்து விற்பனை செய்யலாம்.

# யாழ். குடாநாட்டு வளங்களின் தற்காலப்போக்கு

யாழ். குடாநாட்டின் பிரதான தாவரப் போர்வையாக பனை, தென்னை ஆகியன காணப்படுகிறன. இவவளங்கள் குடாநாட்டு மக்களாலும், இராணுவத்தினராலும் கண்மூடித்தனமாக அழிக்கப்படுகின்றது. எனவே, குடாநாட்டில் பனை, தென்னை மரங்களை நடுகை செய்து பரா மரித்து பனை வளம், தென்னை வளம் என்பன பாதுகாக்கப்படல்வேண்டும்.

இலங்கையிலுள்ள 111 இலட்சம் பனைகளில் 99 விதம் யாழ்.குடாநாட்டில் தான் உள்ளது. யாழ்ப்பாணத்தில் தீவகம் மற்றும் தெல்லிப்பளையில் அதிகமாகக் காணப்படுகின்றது. தென்னை 6-8 கோடியும், பனை 1.11 கோடியும் வளர்கிறது. பனை தான்தோன்றியாக வளர்வதால் தென்னையைவிடப் பனை கூடுதலாக வளர்கிறது. இலங்கையிலுள்ள தென்னைகளில் 50 வீதம் யாழ்.குடாநாட்டில் வளர்கிறது. குடாநாட்டில் பளை, சாவகச்சேரி, மருதங்கேணி மற்றும் நல்லூர்ப் பிரதேசங்களில் தென்னை அதிகமாக வளர்கிறது.

பற்பல காரணங்களுக்காக பனை மரங்கள் தறிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் பிரதானமாக - வீடு கட்டப் பனைமரம் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், தென்னிலங்கையில வீடு கட்ட தென்னைமரத்தையே பாவிக்கப்படுகின்றனர். மேலும் செம்மண் பிரதேசத்தில் பணப் பயிர இவற்றை அகற்றிவிட்டு நிலத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

தற்காலத்தில் போர் நடவடிக்கைகள் காரணமாக பல பனை மரங்களும், தென்னை மரங்களும் தலையற்ற முண்டங்களாகக் காட்சியளிக்கின்றன. பல்குழல் எறிகணைகளுக்கும், விமானக்குண்டு வீச்சுக்கும் தப்பிப் பிழைத்த ஓரிரண்டு பனை, தென்னை மரங்களைக்கூட இராணுவத்தினர் வெட்டிச்சென்று பாதுகாப்பு அரண்களை அமைத்து விடுகின்றனர். உயர்பாதுகாப்பு வலயம், முகாம் விஸ்தரிப்பு என்ற போர்வையில் குடாநாட்டில் நெருக்கமாகவுள்ள பனை, தென்னை மரங்களை அழித்துள்ளனர். மேலும் மக்கள் பற்றைகள், புதர்களை வெட்டி நெருப்பு வைக்கும் பொழுது பனை மரங்களில் வடலிகளையும் எரித்து விடுகின்றனர். முளையிலே கருகிவிடும் பனை வளம் எவ்வாறு செழிப்படையும்?

பனைமரங்கள், தென்னை மரங்கள் மற்றும் பெரிய மரங்கள் அழிக்கப்படுவதால் குடாநாட்டுச் சூழல் பாதிப்படைகின்றது, காலநிலையில் மாற்றம் ஏற்படுகிறது. மழைப்பருவங்களில் மழை கிடைப்பதில்லை. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் குறைந்தது 2 இலட்சம் ஹெக்ரெயர் நிலத்தில் பனை வளர்க்கப்படல் வேண்டும். இந்தச் செயற்பாட்டின் மூலம் அழிந்து போன பனை வளத்தைப் பாதுகாக்கமுடியும்.

பனைவளம் பெருகச் செய்வதற்காக 1978 இல் நிறுவப்பட்ட பனை அபிவிருத்திச்சபை-தெருவோரங்கள், ரயில் பாதை ஓரங்கள், தரிசுநிலங்கள், பாடசாலை, ஆலயம், மயானம் மற்றும் வீட்டு நிலங்களிலும் பனை விதைகளை நாட்டி வருகின்றது. 1998 ஆம் ஆண்டு 60.35 லட்சம் விதைகள் மீள்நடுகை செய்யப்பட்டன. அத்துடன், வளம் குறைந்த நிலங்களில் பனைமரங்களை உருவாக்கவேண்டும் என்ற நோக்கில் பனை அபிவிருத்திச் சபை-மாதிரிப் பனந்தோட்டங்களை உருவாக்கி வருகிறது. யாழ்.குடாநாட்டிலுள்ள மாதிரிப் பனந்தோட்டங்களாவன - மாமுனையில் 20 ஹெக் ரெயர் - 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. புலோப்பளையில் 4 ஹெக்ரெயர், குடதனையில் 4 ஹெக்ரெயர், கரம்பனில் 4 ஹெக்ரெயர், அராலியில் 4 ஹெக்ரெயர் ஆகிய பனந்தோட்டங்கள் 1998 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

மாமுனையிலுள்ள பனந்தோட்டங்களில் பனையுடன் மரமுந்திரி, தென்னை போன்றனவும் வளர்க்கப்படுகின்றன. 1998 இல் பனைவளத்தைப் பாதுகாக்க இலங்கையில் மேற்கொண்ட பெருமுயற்சியினால், 51/2 லட்சம் பனை விதைகள் நடப்பட்டன. அத்துடன், நான்கு பனந் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. யாழ்.மாவட்டத்திலுள்ள பனைகளின் பரம்பலை அட்டவணையில் காணலாம்.

யாழ்.மாவட்டத்தில் பனை மரங்களின் பரம்பல்.

| பிரதேசசெயலர் பிரிவு | பனை (ஆயிரம்) |
|---|---|
| நெடுந்தீவு / வேலணை | 824.1 |
| ஊர்காவற்துறை | 256.2 |
| தெல்லிப்பளை | 705.0 |
| உடுவில் | 102.2 |
| சங்கானை | 310.6 |
| சண்டிலிப்பாய் | 239.9 |
| கோப்பாய் | 180.7 |
| யாழ்ப்பாணம் | 3.9 |
| நல்லூர் | 51.6 |
| சாவகச்சேரி | 321.5 |
| கரவெட்டி | 246.8 |
| பருத்தித்துறை | 167.5 |
| மருதங்கேணி | 90.0 |

தென்னை மரங்கள் போர் நடவடிக்கை காரணமாக அழிவடைந்து காணப்படினும், குடாநாட்டு மக்கள் வருடந்தோறும் தென்னை மரங்கள் நட்டு பிள்ளைகளைப்போல் பராமரித்து வருகின்றனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட 8,327 ஹெக்ரெயர் நிலப்பரப் பில் தென்னைகள் உள்ளன.

அண்மைக்காலங்களில் பனை, தென்னை மரங்கள் அழிவதைத் தடுக்க குடாநாட்டில் தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம் பல முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. குடா நாட்டில் பத்திரிக்கைகளிலும் பனை வளம் தொடர்பான சுலோகங்கள், கட்டுரைகள் வெளிவருகின்றன. பனைவளம் தொடர்பான ஓவியங்கள், வரைபடங்கள் மூலம் மக்களை விழிப்படையச் செய்கின்றனர். பனை, தென்னை மரங்களைத் தறிப்போருக்கு எதிராக கண்டன ஊர்வலங்கள் நடத்தத்திட்டமிட்டுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் கற்பகத்தருக்களாக பனை மரமும், தென்னை மரமும் உள ளன. எனவே, குடாநாட்டு மக்கள் அனை வரும் ஒத்துழைப்பு நல்கி பனைவளம் காக்க வேண்டும். மனிதன் காலுக்கு அணியும் பாதணியில் இருந்து, உணவுப் பண்டங்கள், குடிவகைகள், மென்பானங்கள், தளபாடங்கள், அழகுசாதனப் பொருட்கள், தலைககு அணியும் தொப்பிவரை பனை மரங்களிலிருந்தும், தென்னை மரங்களிலிருந்தும் பெற முடிகிறது. எனவே, இந்த மரங்களை மீள் நடுகை செய்து பராமரித்து, இருக்கிற மரங்களைப் பாதுகாத்து எம் எதிர்கால சந்ததியினருக்கு வளமான நற்சூழலை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

**கிளறிஸ்ரா**
**யாழ்.பல்கலைக்கழகம்**

# உவர் நீராக மாறிவரும் குடாநாட்டின் நிலத்தடி நீர்வளம்

உலகின் மொத்தப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு நீரிலானது. இந்நீரில் பெரும் பகுதி உவர்நீராகவும் உறைபனியாகவுமுள்ளது. மனித பயன்பாட்டிற்கு உகந்த நன்னீர் மிகக் குறைந்த அளவிலே உள்ளது. நன்னீர் என்னும் போது உவர் தன்மையற்ற சுத்தமான நீரைக் குறிப்பிடலாம்.

உலகின் பிரதான நன்னீருக்கான அடிப்படைக் காரணி மழையே ஆகும். மழையின் விளைவாக உருவாகும் ஆறுகள் நீர்த்தேக்கங்கள், நிலத்தடி நீர் என்பன மனித தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கையை எடுத்துக்கொண்டால் மேற்சொன்ன கட்டமைப்புக்குள் அனைத்தும் காணப்படுகின்றன. ஆனால் யாழ்.குடாநாடு தனியே நிலத்தடி நீரை மட்டும் நம்பியுள்ள பகுதியாகும்.

யாழ்.குடாநாடு உவர் வலயத்திற்குள் அடங்கிய கடலால் சூழப்பட்ட, தன்னகத்தே பல கடல் நீரேரிகளைக் கொண்ட சிறிய நிலப்பரப்பு ஆகும்.

மழை நீர் தரைக்குக் கடத்தப்பட்டு நிலத்தின் கீழ்ப்பகுதியிலுள்ள கடினமான பகுதியில் தேங்கி நிற்கிறது. இதுவே நிலத்தடி நீராகும். யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை ஒக்ரோபர் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான மாதங்களே அதிகளவில் மழைபெய்யும் மாதங்களாகும். ஆகவே, இந்த மழை வீழ்ச்சியைக் கொண்டே நிலத்தடி நீர் பெருமளவில உருவாகிறது.

உவர் நீரைவிட நன்னீரில் அடர்த்தி குறைவாகவே இருப்பதால், அவை நிலத்தடியில் ஒன்றுடன் ஒன்று கலப்பதில்லை. குடாநாட்டைச்சூழ உவர் நீர்ப்பரப்பு காணப்படுவதால், நன்னீர் படலத்தின் கீழும், சுண்ணாம்புக் கற்பாறையின் கீழும் உவர்நீர் நிரம்பியுள்ளது.

உதாரணமாக தென்மராட்சிப் பகுதியில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் குறைந்தாலோ அல்லது நீரின் நிறம் மாற்றமடைந்ததாலோ கிணற்றினுள் குழாய் இறக்கி பாறைப்படைக்குக் கீழுள்ள நீர் மேற்கொண்டுவரப்படுகிறது. இதன்போது உவர்த்தன்மையற்ற கிணறுகள் பல உவர்நீராக மாறியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். நாம் நிலத்தடி நன்னீரைப் பயன்படுத்தும்போது இழக்கப்படும் நீர் - மழை வீழ்ச்சி மூலம் ஈடுசெய்யப்படுகிறது.

திட்டமிட்ட முறையில்லாமல் நிலத்தடி நீர் வெளியேற்றப்படும்போது உவர்நீரின் மேல் மிதக்கின்ற நன்னீரில் சிக்கலான சமநிலைத் தன்மையில் பிரச்சினைகள் உருவாகின்றன.

கரையோரப் பகுதிகளில் தேவைக்கு அதிகமாக நீர் பெறப்படும்போது அல்லது நீர் இறைக்கப்படும்போது நன்னீர் - உவர்நீர் சமநிலை குலைக்கப்படுகிறது. இதன் காரணமாக நீர் கெடுவதுடன், நன்னீர்ப்படையுடன் உவர்நீா கலப்பதால் கிணறுகள் உவராக மாறுகின்றது.

இந்த உவர்நீர் பாய்ச்சப்படும்போது நிலம் தரிசாகின்றது. உவர்நீர் மேலும் வெளியேற்றப்பட உள்நிலப் பகுதிகளை நோக்கி உவர் நீரின் பரவல் அதிகரிப்பதுடன், கிணற்று நீரில் உவர்த்தன்மையும் அதிகரிப்பதுடன் நீரின் உவர் தன்மையும் அதிகரிக்கும்.

கிணறுகளிலிருந்து பெருளவில் நீர் அகற்றப்படும்போது, கீழேயுள்ள உவர்நீர் மேலே வரத்தொடங்குவதுடன் கிணறுபாவனைக்கு உதவாத தன்மையினை அடைகிறது.

கிணற்றின நீர்மட்டத்தை உயர்த்தும் நோக்கில் கிணற்றினுள் குழாய் இறக்குதல், துளையிடுதல் போன்ற காரணங்கள, கிணற்று நீர் உவர்நீராகும் வாய்ப்பை அதிகரிக்கச் செய்யும்.

மழை வீழ்ச்சி குறைந்துவரும் வேளையில் நிலத்தடிநீர் தொடர்ந்து கட்டுப்பாடின்றி அகற்றப்படுமாயின், குடாநாடு விரைவில் தரிசாக்கப்படும் அபாயம் ஏற்படும். தீவகப் பிரதேசம், யாழ்.நகரில் அரியாலை, குருநகர், இருபாலை மற்றும் நகர்ப்பகுதிகள், வலிகாமத்தில் சுழிபுரம், மூளாய், வட்டுக்கோட்டை போன்ற பகுதிகள், வடமராட்சியில் மண்டானவெளியை அண்டிய பிரதேசங்கள் மற்றும் கரவெட்டிப் பிரதேசம், தென்மராட்சியில் கல்வயல், நுணாவில், மட்டுவில், சரசாலை போன்ற பகுதிகள் உவர்நீர்ப் பாதிப்புக்குள்ளாகியுள்ள பகுதிகளில் குறிப்பிடத்தக்கவை. ஆயினும் சில பகுதியில் சில நன்னீர் கிணறுகள் உண்டு.

இதற்குக் காரணம்?

வட்டுக்கோட்டையில் ஜேர்மன் தொழிநுட்ப நிறுவனம் குடி தண்ணீர் விநியோகதிற்காகப் பயன்படுத்தும் இரு கிணறுகளும் வயல்களின் நடுவில் அமைந்தவை. சிலவற்றில் நன்னீர் சமநிலை வருடாந்தம் வயலில் தேங்கும் மழைநீரால் பேணப்படுகிறது.

இதேபோன்று, சுழிபுரத்தில் பரவலாய் வயல்வெளிக் கிணறுகளும், கரவெட்டியில் அத்துழு அம்மன் கோவில் வயலை அடுத்துள்ள கிணறுகளும் அமைந்துள்ளன. தீவுப்பகுதியிலும் குளங்களை அண்டிய சில கிணறுகள் நன்னீர்க் கிணறுகளாகவுள்ளமையையும் குறிப்பிடலாம்.

இப்பகுதிகளில் நன்னீர்க் கிணறுகளில் இருந்து 100-200 மீற்றர்கள் தொலைவில் உள்ள கிணறுகள் உவர்நீரையே கொண்டுள்ளன. எனவே, இந்தக்கிணறுகளும் உவர்நீராக மாறக்கூடிய சாத்தியம் உண்டு.

இன்றையசூழலில் நன்னீர பயன்படத்தபடும் அளவுக்கு, அந்த வளத்தைக் காக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை.

நிலத்தடி நீர்வளத்தைப் பேணுவதற்கு என்ன செய்யவேண்டும்?

❖ மிகையான நீர் எடுத்தலை நிறுத்தி, சிக்கனமாய்ப் பயன்படுத்தல்.

❖ கழிவு நீரை வீனே வழிந்தோடவிடாது குழிகளினுள் தேக்கி நிலத்தின் கீழ் உட்புகச் செய்தல். இதனால் நீர் தேங்கும் இடத்தில் நுளம்பு போன்றவை பெருகாது பார்த்துக்கொள்ளல் அவசியமாகும்.

❖ விவசாயத்திற்கு மிகையான நீர்ப்பாசனம் செய்யாத தேவைகருதி சம்பந்தப்பட்ட அலுவலர்களின் ஆலோசனைப்படி நீர்ப்பாய்ச்சுதல்.

❖ நவீன முறையான சொட்டு நீர்ப்பாசனம், துளையிடப்பட்ட பாவனை முறை என்பவற்றைப் பயன்படுத்தல்.

❖ மேற்பரப்பு நீர்த்தேக்கங்கள், அதாவது குளங்கள் அமைத்தல், அவற்றைப் புனரமைத்தல். இதன் மூலம் மழை நீர் கடலில் வீணாகக் கலப்பது தவிர்க்கப்பட்டு நிலத்தடி நீர்வளம் அதிகரிக்கின்றது.

ஒவ்வொரு காணியைச் சூழவும் வரம்பு அமைத்து மழைநீர் தேங்கச்செய்தல் மூலம் நிலத்தினுள் செல்வதை அதிகரிக்கலாம். இந்தச் செயல் முறையால் மண்ணரிப்பு, மண்கனியுப்பின் இழப்பு என்பன தவிர்க்கப்படுகிறது. இந்தமுறையை எமது முன்னோர் கடைப்பிடித்து வந்தனர்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | சாவகச்சேரி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 30/= | 40/= | 40/= | 30/= | 30/= | 25/= | 15/= | 30/= |
| வெண்டிக்காய் | 20/= | 20/= | 25/= | 30/= | 40/= | 20/= | 20/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 50/= | 65/= | 65/= | 55/= | 70/= | 60/= | 70/ | 60/= |
| கத்தரிக்காய் | 30/= | 40/= | 35/= | 25/= | 40/= | 30/= | 20/= | 15/= |
| பாகற்காய் | 40/= | 50/= | 25/= | 50/= | 50/= | 40/= | 50/= | 40/= |
| கரட் | 30/= | 30/= | 30/= | 20/= | 30/= | 20/= | 40/= | 15/= |
| பீற்றூட் | 10/= | 20/= | 15/= | 15/= | 20/= | 20/= | 10/= | 30/= |
| முருங்கக்காய் | 80/= | 100/= | 160/= | 120/= | 80/= | 100/= | 120/= | 90/= |
| வெங்காயம் | 40/= | 35/= | 30/= | 30/= | 35/= | 40/= | 30/= | 25/= |
| பச்சை மிளகாய் | 30/= | 40/= | 40/= | 25/= | 40/= | 30/= | 35/= | 30/= |

# 'தாரண' புத்தாண்டு

## உங்களுக்கு எப்படி?

**தமிழ் வருடங்கள் மொத்தம் 60. சித்திரை முதல் பங்குனிவரை ஒரு ஆண்டாகக் கணக்கிடப்படுகிறது. சித்திரை மாதம் சூரியன் மேட ராசியில் நுழையும் நாளே சித்திரை விஷு என்னும் தமிழ்ப் புத்தாண்டு தினம். 12 ராசிகளிலும் வலம் வரும் சூரியன் தங்கியிருக்கும் காலம் தான் ஒரு மாதம். தற்போது சுபானு ஆண்டு முடிந்து, தாரண ஆண்டு 13.04.2004 பிறக்கின்றது. தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று சூரியன் பூமியின் அருகில் இருக்கும். இது ஒரு புனிதமான நாள். இன்றைய தினத்தில் கோயில்களுக்குச் சென்று, புண்ணிய நதியில் நீராடி இறைவனை வழிபடுவது சிறப்பு. இந்தத் தாரண ஆண்டின் குரு பெயர்ச்சியும், ராகு, கேது பெயர்ச்சியும் நிகழ்கின்றது. ஆண்டின் தொடக்கத்தில் கிரகங்களின் ஒன்றான குரு பகவான் சிம்மராசியில் இருக்கின்றான். அவர் 15.08.2004 அன்று கன்னி ராசிக்குச் செல்கின்றார்.**

**அடுத்து ராகு - கேது இடப்பெயர்ச்சி 5.02.2005 அன்று நிகழ்கின்றது. தற்போது மேட ராசியில் இருக்கும் ராகு, அன்றைய தினம் மீனராசிக்கு மாறுகின்றார். அந்தச் சமயம் கேது துலாம் ராசியில் இருந்து கன்னி ராசிக்கு இடம்பெயர்கின்றார். இன்னொரு அதிமுக்கிய கிரகமான சனி ஆண்டு முழுவதும் மிதுனராசியில் தான் பிரவேசிக்கின்றார். இந்த முக்கிய கிரகங்களின் இருப்பிடத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்தப் புத்தாண்டுப் பலன் கணிக்கப்பட்டுள்ளது. குருவின் பார்வைக்கு அதிக சக்தி உண்டு. சில ராசியினருக்கு இந்த நான்கு முக்கிய கிரகங்களும் சிறப்பான இடத்தில் இல்லாமற்போகலாம். அவர்கள் கவலைப்படவேண்டாம். விரைவாகச் சுழலும் சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன், சந்திரன் ஆகிய கிரகங்கள் அவ்வப்போது நற்பலனைக் கொடுக்கும்.**

### சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)



எதிலும் தனித்துவத்தைக்கொண்ட சிம்மராசி அனபார்களே- நீங்கள் சூரியனை ஆட்சி நாயகனாகக் கொண்டவர்கள். உங்கள் எண்ணம் எப்போதும் ஓங்கிநிற்கும். எதையும் சாதித்துவிடலாம் என்ற தனனம்பிக்கை கொண்டவர்கள். சனிபகவான் உங்களுக்கு பகை கிரகமானாலும் ஆண்டு முழுவதும் நன்மைதரும் இடத்தில் இருக்கிறார்.

இதனால் வளமான வாழ்வு தொடரும். பொருளாதாரம் சிறப்பாகவே இருக்கும். ஏனைய முக்கிய கிரகங்களைக் கணக்கில் எடுத்துப் பார்த்தால் இந்த ஆண்டு வளர்முகமாகவே அமையும். குருபகவான் தற்போது உங்கள் ராசியில் இருக்கிறார். நட்பு கிரகமாக அவர் இருந்தாலும் அவரால் இப்போது நன்மைதர முடியாதநிலைதான். அவரால் கடந்த சில மாதங்களாக வீண் விரோதமும், கலகமும் வந்திருக்கும். ஆனால், அவரது பார்வைகள் அனைத்தும் சிறப்பாக இருப்பதால் அதன் மூலம் முன்னேற்றங்களைக் காணலாம்.

குருபகவான் ஆவணி மாதம் 15 ஆம் திகதி 2 ஆம் இடத்திற்குச் செல்கிறார். இது சிறப்பான இடம். பல்வேறு நன்மைகளைத் தரவுள்ளார். அதன்பின் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். மேலும் எந்தப் பிரச்சினையையும் எதிர்கொண்டு முறியடிக்கும் சாமர்த்தியம் பெறுவீர்கள்.

தற்போது ராகு 9 இல் இருக்கிறார். உங்கள் முயற்சியில் சிறுசிறு தடைகளை உருவாக்கி வரும் அவர் - வருகிற மாசி 5 ஆம் திகதி 8 ஆம் இடத்திற்கு செல்கிறார். இதுவும் சிறப்பான இடம் அல்ல. கேது தற்போது 3 ஆம் இடத்திலுள்ளார். இதன்மூலம் தெய்வ அனுகூலம் உங்களுக்குக் கிடைக்கும். அவர் மாசி 5 ஆம் திகதி 2 ஆம் இடத்திற்கு வருவது அவ்வளவு சிறப்பல்ல. ஆனால், அவர் குருவுடன் இணைவதால் அதிக பாதிப்பையும் கொடுக்கமாட்டார். பொதுவாக ஆண்டு முழுவதும் சனியும், ஆண்டின் தொடக்கத்தில் குருவின் பார்வையும, அதன்பின் குருவின் பலமும் சேர்ந்து நன்மை தருவார்கள். முக்கிய கிரகங்களின்நிலையைக் கணக்கில் கொண்டு காலவாரியான பலனைக்காணலாம்.

**சித்திரை 13 முதல் ஆவணி 15 வரை**

எதைத் தொட்டாலும் அதை வெற்றிகரமாக முடிக்கலாம். பணப்புழக்கம் அதிகரிக்கும். காரிய அனுகூலம் ஏற்படும். தேவையான பொருட்கள் அனைத்தும் வாங்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கணவன் - மனைவி இடையே அன்பு நீடிக்கும்.

சிலர் அதிக முயற்சி எடுத்து புதிய வீடு வாங்குவர். உத்தியோகம் பார்ப்பவர்கள் அதிக

**தமிழ்நாட்டிலிருந்து பிரபல ஜோதிடர்**
**பண்டித காழியூர் நாராயணன்**

உழைப்பை சந்திக்கவேண்டியிருக்கும். ஆனால், அதற்கான பலன்கள் கிடைக்கும். மேலதிகாரிகளிடம் அனுசரித்துப்போகவும். வியாபாரிகள் மிகவும் சிறப்பாக இருப்பர். வருமானம் அதிகரிக்கும். புதிய வியாபாரம் அனுகூலத்தைக் கொடுக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. உங்களுக்குப் பகைவர்களாக இருந்தவர்கள் உங்களை உணர்ந்து உங்களிடம் சரணடைவர். கொடுக்கல் வாங்கல் சிறப்பாக இருக்கும். காய்கறி வியாபாரம், தானிய வியாபாரம், பாத்திர வியாபாரம் முதலியவை நன்கு வளர்ச்சியடையும். இரும்பு தொடர்பான வியாபாரத்தைச் செய்பவர்கள் மிகவும் செல்வாக்கு அடைவர். கலைஞர்கள் நல்ல நிலையில் இருப்பர். எதிர்பார்த்த புகழ் பாராட்டுக் கிடைப்பதில் தாமதமாகும்.

மாணவர்களுக்கு இந்த ஆண்டு சீரானதாக இருக்கும். முயற்சிக்குத் தகுந்த பலன் கிடைக்கும். விவசாயிகள் முன்னேற்றம் காண்பர். புதிய சொத்து வாங்கலாம். வழக்கு விவகாரங்கள் சுமாராக இருக்கும். பெண்கள் குதூகலமாகக் காணப்படுவர். குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு பெருகும். உடல்நலம் சிறப்பாக இருக்கும்.

**ஆவணி 16 முதல் பங்குனி வரை**

குருபகவான் சாதகமான இடத்திற்கு வந்துவிட்டார். கேதுவின் நன்மை பெப்ரவரிவரை நீடிக்கும். காரிய அனுகூலம் தொடர்ந்து கிடைக்கும். தடைகள் அகலும். மதிப்பு மரியாதை அதிகரிக்கும். பொருளாதார வளம் மேலும் சிறப்படையும். தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். குடும்பத்தில் ஆனந்தம் நிலவும். தம்பதியினரிடையே ஒற்றுமை ஏற்படும். பிரிந்திருந்த குடும்பம் ஒன்றுசேரும். தடைப்பட்டு வந்த திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். உறவினர்கள் வகையில் சுமாரான போக்கே இருக்கும். வருட இறுதியில் சிலரது வீட்டில் திருட்டுப் போகலாம். சற்றுக் கவனம் தேவை. உத்தியோகம் பார்ப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். கடந்தகாலத் தடைகள் விலகும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். சிலருக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்க வாய்ப்புண்டு. வேலையின்றி இருப்பவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புண்டு.

வியாபாரிகள் சிறப்பான லாபம் கிடைக்க பெறுவர். கூட்டாளிகள் ஒற்றுமையுடன் இருப்பர். சிலர் வியாபாரத்தை விரிவுபடுத்துவர். 2005 பெப்ரவரிக்குப் பின் அரசு வகையில் அனுகூலம் இருக்காது. எனவே, வரவு -செலவு கணக்கைச் சரியாக வைத்துக்கொள்ளவும்.

கலைஞர்கள் புதிய ஒப்பந்தம் பெறலாம். புகழ் பாராட்டு கிடைக்கும். அரசியல்வாதிகளும் முன்னேற்றம் காண்பர். மாணவர்கள் நல்ல வளர்ச்சி காண்பர். விவசாயிகள் சிறப்பான வருவாய் காண்பர். புதிய சொத்து வாங்கலாம். வழக்கு விவகாரங்கள் சாதகமாக இருக்கும். இழந்த உடமை மீண்டும் கிடைகக வாய்ப்பு உண்டு.

பெண்கள் குதூகலம் காண்பர். உடல் நலணைப் பொறுததவரை சீராக இருக்கும். ஆண்டு இறுதியில் நெருப்பு தொடர்பான வேலையில் இருப்பவர்கள் சற்றுக் கவனமாக இருக்கவும். சனி கொடுக்கும் இன்னல்களுக்குத் தெய்வங்களும் தப்பியதில்லை. அழகான முகத்தோடு இருந்த விநாயகன் ஆனைமுகத்தோனாக மாறினார் சனியின் பார்வையால் சர்வேஸ்வரனே தப்பியதில்லை.

### கன்னி

(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)



மென்மையான அணுகுமுறையைக் கொண்ட கன்னிராசி அன்பர்களே- உங்கள் ஆட்சி நாயகன் புதன். நீங்கள் காரியத்தை சாதிக்கலாம். கடந்த ஆண்டு முக்கிய கிரகங்கள் எதுவும் சாதமான இடத்தில் இல்லாததால், உங்களுக்குப் பிற் போக்கான நிலையே இருந்து வந்தது.

சனிபகவான் 10 ஆம் இடத்தில் இருந்து உங்களை பல்வேறு பிரச்சினைக்கு ஆளாக்கியிருப்பார். அவரால் உங்கள் முயற்சியில் தடைகள் பல வந்திருக்கும். அவர் இந்த ஆண்டுமுழுவதும் அதே இடத்தில்தான் இருககிறார். இதனால் கஷ்டங்கள் தொடருமோ என எண்ணவேண்டாம். மற்றக் கிரகங்களின் நிலையை நோக்கித்தான் முழுப்பலனையும் அறியவேண்டும். முக்கிய கிரகங்களில் ஒன்றான குருபகவான் தற்போது 12 ஆம் இடத்திலிருந்து இனம் புரியாத ஒரு சோகத்தை மனதில் தந்துகொண்டிருப்பார். இந்தநிலை தொடர்ந்து நீடிக்காது. வருகிற ஆவணி மாதம் 15 ஆம் திகதி குருபெயர்ச்சி வருகிறது.

அதன்பின்னர் குருபகவான் உங்கள் ராசிகு வருகிறார். இதுவும் அவ்வளவு சிறப்பான இடம் என்று சொல்லமுடியாது. அதேநேரம் குருவின் பார்வைகள் அனைத்தும் சாதகமாக இருக்கும். குரு 3,5,7 ஆகிய இடங்களைப் பார்ப்பார். அந்த மூன்று இடங்களும் சாதகமாக இருப்பது விசேடம். இதனால் உங்களுக்கு இதுவரை இருந்து வந்த இடையூறுகள் அனைத்தும் முறியடிக்கப்படும். நிழல் கிரகமான கேது தற்போது 2 ஆம் இடத்தில் இருக்கிறார். ராகு 8 ஆம் இடத்தில் இருக்கிறார். இவர்கள் மாசி 5 ஆம் திகதி இடம்மாறுகிறார்கள். கேது உங்கள் ராசிக்கும் ராகு 7 ஆம் இடத்திற்கும் வருகிறார்கள். இவர்கள் இருக்கும் இடமும் போகப்போகும் இடமும் சிறப்பானது இல்லை. உங்கள் முயற்சியில் சிறுசிறு தடைகளை அவர்கள் உருவாக்கலாம். ஆனாலும் குருவின் பார்வையால் இந்த ஆண்டுப் பிற்பகுதி சிறப்பானதாக இருக்கும்.

மேலும் மாசிக்குப்பின் கேதுவுக்கு வேதையாக குரு அமைகிறார். எனவே அவரால் கெடுபலனை கொடுக்கமுடியாது.

**சித்திரை 13 முதல் ஆவணி 15 வரை**

எந்த ஒரு காரியத்தையும் வெற்றிகரமாக செய்துமுடிக்க அதிக முயற்சி எடுக்கவேண்டியிருக்கும். பொருளாதாரவளம் சீராக இருக்கும். வீண்செலவுகளும் ஏற்பட வாய்ப்புண்டு. சிக்கனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். தம்பதிகளிடையே ஒற்றுமை நீடிக்கும். உறவினர்கள் வகையில் பிணக்குகள் ஏற்படும். அவர்களிடம் அனாவசிய வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

சிலரது வீட்டில் களவுபோக வாய்ப்புண்டு. திருமணம் போன்ற சுபநிகழ்சிகள் தாமதம் ஆகலாம். உத்தியோகம் பார்ப்பவர்கள் அதிக வேலைப்பழுவை சுமக்கலாம். சிலருக்கு வேலையில் ஒரு பிடிப்பு இல்லாமல் இருக்கும். அலைச்சல், வெறுப்புணர்வு அதிகமாக இருக்கும். மேலிடத்து அதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும் இடமாற்றம் ஏற்படலாம். வியாபாரிகள் சாதாரணநிலையில் இருப்பர்.

புதிய வியாபாரம் தற்போது வேண்டாம். அதிக அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளரிடம் இணக்கமாகப் போகவும். அரச வகையில் அனுகூலமான போக்கு காணப்படவில்லை. எனவே வரவு-செலவுக் கணக்கை சரியாக வைத்துக்கொள்ளவும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தம்பெற சற்று முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். அதேபோல் எதிர்பார்த்த புகழ், பாராட்டு கிடைக்காமல் போகலாம். மாணவர்கள் சிலர் மந்தநிலையில் இருப்பர். அதிக முயற்சி எடுத்துப் படிக்கவேண்டியிருக்கும். உழைப்புக்கு ஏற்றபலன் ஓரளவு கிடைக்கும்.

தசாபுத்தி நன்றாக இருப்பவர்களுக்கு வெற்றி வாய்ப்பு பாதிக்காது. விவசாயிகள் சுமாரான வருமானத்தையே காண்பர். அதிக செலவாகும். பயிரை நாட்டவேண்டாம். பெண்கள் மகிழ்சியாக காணப்படுவர். அக்கம் பக்கத்தாரிடம் அதிக நெருக்கம்வேண்டாம். வழக்கு விவகாரங்கள் சுமாராகவே இருக்கும். நெருப்பு தொடர்பான வேலையில் இருப்பவர்கள் சற்றுக் கவனமாக இருக்கவும்.

**ஆவணி 16 முதல் பங்குனி வரை**

கடந்தகால பின்னடைவுகள் மறையும். திருப்திகரமானநிலையை நோக்கி வாழ்க்கை திரும்பும். குரு உங்கள் இராசிக்கு வருகிறார். அவர் ராசியில் இருப்பது அப்படியொன்றும் சிறப்பானதென்று சொல்லமுடியாது. என்றாலும் அவரது பார்வைகள் அனைத்தும் சாதகமாக அமைவதால், அதன்மூலம் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். பொருள் விரயம் சற்றுக்குறையும். திருமணம், போன்ற சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். தடைப்பட்ட திருமணம் நடக்கும். பிள்ளைப்பாக்கியம் கிடைக்கும். சிலரது வீட்டில் தம்பதியினரிடையே கருத்து வேறுபாடு வரலாம். வீட்டுக்குத் தேவையான பணம்வரும். உத்தியோகம் பார்ப்பவர்கள் பின்தங்கிய நிலையிலிருந்து விடுபடுவர். வேலையில் திருப்தி காண்பர். தடைகள் அகலும். சிலர் முயற்சியெடுத்தால் கோரிக்கைள் நிறைவேறும். இடமாற்றப் பீதி இருக்காது.

வியாபாரத்தில் நட்டம் என்றநிலை வராது. உழைப்புக்கேற்ற வருமானம் கிடைக்கும். வியாபாரம் சற்று வளர்ச்சியடையும். ஆனால், தொடர்ந்து சிரத்தையெடுத்தே உழைக்கவேண்டிருக்கும். அரசு வகையில் இருந்து வந்த பிரச்சினைகள் மறையும்.

கலைஞர்களுக்கு உரிய ஒப்பந்தம் புகழ், பாராட்டுக் கிடைக்கும். ஆசிரியர், வக்கீல் மற்றும் பத்திரிகைத் தொழில் சிறப்படையலாம். பெண்கள் - கணவர் மற்றும் குடும்பத்தாரிடம் நன்மதிப்புப் பெறுவர். உடல் நலம் சீராக இருக்கும். மருத்துவச் செலவு குறையும்.

◆

**அரசியல்**

# ஆரம்பமே குழம்பிப்போயுள்ள இலங்கை அரசியலின் எதிர்காலம்

**ஆதி**

இலங்கையின் புதிய அரசு அதன் ஆரம்ப கட்டத்திலேயே பல்வேறு நெருக்கடிகளைச் சந்திக்க ஆரம்பித்துள்ளது. குறுகியகாலப் பகுதியில் தேர்தல்களைச் சந்தித்த இலங்கை மக்கள் மீண்டும் ஒரு நாடாளுமன்ற தேர்தலை மிகவிரைவில் சந்தித்தாலும் ஆச்சரியமில்லை.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றாத இலங்கையின் இரண்டு பெரும்பான்மைக்கட்சிகளும் - சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவுடனேயே ஆட்சி அமைக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

ஆனாலும், தனது பெருன்பான்மைப் பலம் பற்றிய உறுதிப்படுத்தல்களுக்கு முன்பே சுதந்திர மக்கள் கூட்டமைப்பு பிரதமரை நியமித்ததுடன், அமைச்சரவையையும் நிறுவியது.

'பல எலிகூடிப் புத்தெடாது' என்பதுபோல பல கட்சிகள் சேர்ந்து அமைக்கும் அரசு உருப்படியாக வரப்போவதில்லை என்பதற்கான சகுனங்கள் இப்போது வெளிப்பட்டு வருகின்றன.

சுதந்திர மக்கள் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் முக்கிய இடம்பெறும் ஜே.வி.பி- அரசை தனது விருப்பங்களுக்கு ஏற்றாற்போல் அமைத்துக்கொள்ள முற்படுகிறது. அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் என்பவற்றிலிருந்து பிரதம மந்திரியை நியமிப்பது வரை அந்தக்கட்சி தனது தலையீட்டை மேற்கொண்டு வருகிறது. பிரதம மந்திரியாக லக்ஷ்மன் கதிர்காமரை நியமிக்கவேண்டும் என்பதிலும் வேறு சில அமைச்சுப்பதவிகளை தன்வசப்படுத்தும் விடயத்திலும் கட்சியின் தலைமைக்கும், ஜே.வி.பியினருக்கும் முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

குறைந்தளவான மக்கள் ஆதரவுடன் மறைமுகமாக இருந்த கட்சி - இன்று இலங்கைத் தீவில் ஒரு முக்கிய கட்சியாக வளர்ச்சி கணடுள்ள நிலையில், தனது பேரம்பேசும் ஆற்றலையும் அதிகரித்துக்கொண்டுள்ளமை ஏனைய பெரும்பான்மைக் கட்சிகளுக்குச் சவாலாகவும் மாறியுள்ளது என்றே கருதவேண்டியுள்ளது.

புதிய பிரதமராகப் பதவியேற்றுக்கொண்ட மகிந்த ராஜபக்ஷ- ஒருவாரகாலத்துக்குள்ளேயே இராஜினாமா பற்றிய ஊகங்களும் ஆரம்பித்துவிட்டன.

விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்ட சிறிய பிரச்சினையைப் பூதாகரமாக்கி, அரசியல் இலாபம் தேடமுயல்வதும்கூட புதிய அரசின் ஆரம்ப நாட்களிலேயே நடைபெறுகின்றது. விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள். அவர்கள் சமர்ப்பித்துள்ள இடைக்கால வரைபு யோசனைகளின் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுக்கள் இடம் பெறவேண்டும் என்பதை வட-கிழக்குத் தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் ஏகோபித்த குரலில் தீர்ப்பளித்துள்ளநிலையில், இதற்கு மாறான கருத்துக்களை அரசின் சார்புக்கட்சிகள் வெளியிட்டு வருவது, இந்த அரசின் ஆட்சிக் காலத்தைக் கேள்விக் குள்ளாக்கியுள்ளது. இலங்கை அரசியல் வரலாற்றில் மாறிமாறி வந்த சிங்கள ஆட்சியாளர்கள் - தமிழ் மக்களின் பால் அக்கறை உள்ளவர்களாகக் காட்டியே, தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து வந்தனர். ஆனால் தற்போதைய அரசு ஆரம்பத்திலேயே குழப்பமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

சபாநாயகர் பதவிக்கு ஏற்பட்டுள்ள போட்டியில் தீர்வு எப்படி அமையப்போகிறது என்பதிலிருந்ததான் 'குரங்கு அப்பம் பகிரும் விளையாட்டு' ஆரம்பமாகப் போகிறது. மொத்தத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகள் இன்றுவரை நடைபெறுகிறது. ஆனால், உதிரிக்கடசிகளோ மதில்மேல் பூனையாகவே உள்ளன. தமது நலனையும் அரசியல் எதிர்காலத்தையும் வைத்துக்கொண்டே தமது முடிவைத் தீர்மானிக்கவுள்ளனர்.

கருணாவின் துரோகத்தனத்தை தமது சுயநலனுக்காகப் பயன்படுத்துவதற்கு முயன்ற சிங்கள அரசினதும் பாதுகாப்பு தரப்பினதும் முயற்சிகளுக்கு- விடுதலைப் புலிகள் தெளிந்த திட்டத்துடனும், தூரநோக்குடனும் கருணாவின் பிரச்சினையைக் கையாண்டதன் மூலம், மீண்டும் ஒரு ஆபத்திலிருந்து தமிழர் தாயகத்தைக் காப்பாற்றியுள்ளனர்.

இலங்கையின் 13 ஆவது நாடாளுமன்றம் ஆரம்பம் முதலே குழம்பிய குட்டையாகவுள்ளதால் மக்கள் மனங்களில் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. ஆகவே, குழப்பங்களைச் சுமூகமாகக் கையாண்டு, தேர்தலுக்கு முன்னான அரசின் சொல்லிலும் தற்போதைய செயலிலும் ஒற்றுமை காணப்படாவிடின் அரசு கலைந்து போவதற்கும், மீண்டும் யுத்தம் உருவாகும் சூழல் ஏற்படவும், பொருளாதாரம் பாதாளத்தில் செல்லவும் வாய்புண்டாகும்.

தமிழர்கள் முழுமையான ஆர்வத்துடன் தேர்தலில் பங்குகொண்டு எட்டப்பட்ட வரலாற்று வெற்றியாக 22 ஆசனங்கள் கொண்ட நாடாளுமன்ற பலமான ஜனநாயக வெற்றியை நோக்கி மீண்டும் வழிநடத்தப்படப்போகிறது என்பதை உறுதிபடக் கூறமுடிகிறது.

◆

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*எற்றிற்கு உரியவர் கயவர்ஒன்ற உற்றக்கால்*
*விற்றற்கு உரியவர் விரைந்து*

திருக்குறள்

# நமது நோக்கு

## தலைமறைவான வெறும் மனிதன்

- விடுதலைப் புலிகளின் நடவடிக்கையின் தீவிரத்திற்கு தாக்குப்பிடிக்கமுடியாமல் கருணாவும் அவரது அணியினரும் பின்வாங்குகின்றனர்.

- கருணா அணியைச் சுற்றிவளைக்க புது வியூகம்.

- கருணா தொப்பிகல தளத்தைப் பலப்படுத்தி வருகின்றார்.

- புலிகளின் பூரணகட்டுப்பாட்டில் வாகரை - தனது அணிகளைப் பின்வாங்குமாறு கருணா உத்தரவு.

- கருணா கொழும்புக்கு தப்பியோட்டம்?

- கருணா வெளிநாட்டுக்கு தப்பியோடிவிடுவார் என்கிறார் பெண் போராளி.-

- கருணா பாதுகாப்பு கோரினால் அவருக்கு புகலிடம் வழங்கப்படும் என்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்...

- இராணுவமுகாம்களில் கருணா தஞ்சமடைந்திருக்கலாம்...!

- மூலை முடுக்கெல்லாம் தேடியும் கருணாவின் தடயம் இல்லை.

இவையெல்லாம் கடந்த சில நாட்களாக பத்திரிகைகள் உட்பட வெகுசனத் தொடர்பூடகங்களில் வெளியான மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட நிலைமைகள் தொடர்பாக வெளியான தலைப்புச் செய்திகளாகும்.

இந்தச் செய்திகளை ஒரு ஒழுங்கமைப்பின் பிரகாரம் வரிசைப்படுத்திப் பார்த்தால் ஒரு உண்மையை தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும். அதாவது ஒரு மாதத்திற்கு முன்னர் கருணா எனப்படும் பிரபலமான மனிதர், தனக்கே உரியதான தமிழ் மக்களின் அன்பையும், மரியாதையையும், அம்மான் என உரிமையுடன் அவர்கள் அழைக்கும் கௌரவத்தையும்- தனது சின்னத்தனமானதும், இனவிரோதத் தன்மை கொண்டதும, வெறும் சுயநல அபிலாஷைகளை மட்டுமே உள்ளடக்கியதுமான செயற்பாடுகள் காரணமாக புறந்தள்தள்ளிவிட்டு, ஒரு தான்தோன்றித்தனமான கிழக்கு மக்களின் தலைவராக தன்னைப் பிரகடனம் செய்துகொண்டு, பிரதேசவாதம் என்ற மாயைக்குள் சிக்கியவராக, திடீரென எழுச்சி கொண்டு தமிழ்தேசியத்தை சிதைக்கும் சூழ்ச்சியாளர்களின் கைப்பொம்மையாகி, அறிக்கைகளை விட்டும் ஊடகங்களுக்கு பேட்டியளித்தும் தனது இரண்டாவது சுய - கோர முகத்தை இனங்காட்டியபோது தமிழினம் பட்டபாடு வார்த்தைகளுள் அடங்காது.

இந்த ஒரு மாதகாலத்திற்குள் கருணா என்ற மனிதனின் துரோகத்தனத்தால் பாதிக்கப்பட்ட கிழக்குப் பகுதி மக்களின் அச்சம் நிறைந்த அவலவாழ்வு நாளொரு வடிவம் கொண்டு துயரத்தில் மூழ்கி எழுந்ததை நாடறியும்.

அந்த மனிதரின் துரோகத்தனத்துக்கு அனுசரணை வழங்கியோரும், அதனை நியாயப்படுத்தி தர்க்கித்தவர்களும், அவரை ஒரு மாபெரும் தலைவராக காட்ட முயற்சித்த அயல்நாட்டு ஊடகங்களும், அவரைப் பயன்படுத்தி அரசியல், இராணுவ ஆதாயங்களைப் பெற அவருக்கு. பாதுகாப்பும் அங்கீகாரமும் அளிக்க முயன்றவர்களும்- அவரின் கதை இப்படி ஒரு அபத்தம் நிறைந்த அரைகுறையாகிவிடும் எனக் கனவுகூடக் கண்டிருக்க மாட்டார்கள்.

வரலாறு குற்றவாளிகளை மன்னித்துவிடும், எதிரிகளைக்கூட மறந்து மன்னித்துவிடும். ஆனால் துரோகிகளை மன்னிக்கவும் மாட்டாது மறக்கவும் மாட்டது. வரலாற்றில் துரோகத்தனங்கள் குறித்த பதிவுகள் மேற்கொள்ளப்படும்போதெல்லாம் அவர்கள் நினைவுக்கு கொண்டுவரப்படவே செய்வர்.

உண்மையிலேயே கருணா தனது பிரதேசத்தினதும், அதன் மக்களினதும் நன்மையை, வளர்ச்சியை, முன்னேற்றத்தை கருத்தில் கொண்டவராக, அதற்கென இலட்சிய உறுதியுடன் செயற்படத் துணிந்தவராக இருந்திருந்தால், அவரின் கீழ் இயங்கிய படையணியினராலேயே கடைசியில் ஓடஓட விரட்டப்படும் அவலம் நேர்ந்திருக்கமாட்டாது.

அவர் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலக்கப்பட்ட பின்னரும், தான் இன்னமும் விடுதலைப் புலிதான் என்று கூறிக்கொண்டு வந்தமையானது- தன் நெஞ்சறிந்த உண்மையெனில் எதிரியின் பாதுகாப்பை கோரி அவனது முகாம்களுள் பதுங்கிடம் கோரியிருக்க மாட்டார்.


உண்மையான இலட்சிய உறுதியுள்ள வீரனுக்கு அது அழகேயல்ல. கருணா கடைசியில் சில்லறைத்தனமான தனது தகுதிக்கும், தகைமைக்கும் அப்பாற்பட்ட பேராசைக்குள் வீழ்ந்து, இலட்சியமிழந்த வெற்று மனிதனாக தலைமறைவாகும் வரலாற்று அவமானத்தை சுமக்க நேர்ந்துள்ளமையானது - அவரைப் போன்ற அற்பத்தனமான குறிக்கோளை ஆத்மாவில் சுமந்து திரிவோர் அனைவருக்கும் ஒரு பாடமேயாகும்.

ஒரு இனத்தின் விடுதலைப் போராட்ட இலட்சியத்தை தனது சொந்த சுயநலனுக்காக விற்கவோ, விட்டுக் கொடுக்கவோ முனையும் எந்த நபரும் அந்த இனத்தவரால் துரோகியாகவே இனங்காணப்படுகிறான்.

துரோகியாக இனங்காணப்படும் ஒருவன் தனது மனித அடையாளத்தையே இழந்தவனாகின்றான்.

கருணாவை தமிழினம் எப்படி அடையாளப்படுத்தியுள்ளது என்பதை விளக்கவேண்டிய அவசியமேயில்லை.

## நாடும் நடப்பும்




# வடமேல் மாகாணசபைத் தேர்தல்; விசேட பொலிஸ் குழுக்கள் பணியில்!

தப்பி ஓடிய படையினர், பாதாள உலக குழுக்களின் தலைவர்கள் வடமேல் மாகாணசபை தேர்தலில் வன்முறைகளில் ஈடுபடலாம் என்ற காரணத்தால், தேர்தலுக்கான பொலிஸ் செயலகம் ஒரு விசேட பொலிஸ் குழுவை அமைத்து அவர்களைக் கண்காணிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

வடமேல் மாகாணசபை தேர்தல் ஏப்ரல் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பொதுத்தேர்தலின் போது, 200 இரகசிய இராணுவ பாதாள உலகக் குழு உறுப்பினர்கள், வன்முறைகளில் தொடர்புபட்டதாக கைதுசெய்யப்பட்டனர்.

2001 ஆம் ஆண்டு மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் நடந்ததுபோன்று, தேர்தல் வன்முறைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள வடமேல் மாகாணசபை தேர்தலில் நடக்காமல் தடுக்க வேண்டும் என, பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

எனவே, விசேட பொலிஸ் குழுக்கள் வடமேல் மாகாணத்தில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. சிலாபம், குருநாகல், குளியாப்பிட்டிய, நிக்கவரெட்டிய ஆகிய நாலு பிரிவுகளிலும் நான்கு பொலிஸ் நிலையங்கள் இதற்காக புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண- பொது மக்களை பொலிஸாருக்கு உதவுமாறு கேட்டுள்ளார். வரும் தேர்தலில் சகலரும் உதவும் பட்சத்தில் வன்முறைகளை குறைப்பதுடன் வன்முறைகளில் ஈடுபடுவோரையும் கைதுசெய்யலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

விசேட குழுக்களுக்கு மேலாக ஒரு பொலிஸ் தலைமை அலுவலகம் இயங்கவுள்ளதாகவும் அது சகல நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்யும் எனவும், மூன்று ஆயுதம் தரித்த பொலிஸார் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் கடமையில் அமர்த்தப்படுவர் எனவும் குறிப்பிட்டார்.

அதி உச்சமான பாதுகாப்பை வாக்காளருக்கும், வேட்பாளர்களுக்கும் அளிப்பதாக உறுதியளித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், இது தேர்தலின்போது நடைமுறையில் இருக்குமெனவும் கூறினார்.

மூன்று பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் - பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தலைமையில், வடமேல் மாகாணசபை தேர்தல்களுக்கான பாதுகாப்பு கடமைகள் குறித்து மேற்பார்வை செய்துள்ளனர்.

## இடம்பெயர்ந்துள்ள மக்களில் 3000 பேர் வீடுகளுக்கு திரும்பினர்

### ஐ.நா. தூதராலயம் தகவல்

மட்டக்களப்பில் கருணாவை வெளியேற்றுவதற்காக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட நடவடிக்கையையடுத்து- இடம்பெயர்ந்த மக்களில் மூவாயிரத்துக்கும் அதிகமானோர் நேற்றுமுன்தினம் சொந்த இடங்களுக்கு திரும்பியதாக ஐக்கிய நாடுகள்சபையின் அகதிகளுக்கான நிறுவனம் நேற்று செய்தி வெளியிட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை மோதல்கள் ஆரம்பித்ததையடுத்து இடம்பெயர்ந்த 3,303 பேர் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள இரண்டு பாடசாலைகளில் தங்கியிருந்தனர்.

இவர்கள் புதுவருட தினமான நேற்றுமுன்தினம் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பியுள்ளதாக ஐ.நா. அகதிகளுக்கான தூதராலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பௌத்த பிக்குகளுக்கு நாடாளுமன்றில் விசேட வசதிகள்

பௌத்த பிக்குமார்களுக்காக நாடாளுமன்றத்தில் விஷேட ஓய்வறையும் உணவுச்சாலை ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

ஹெல உறுமய கட்சியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பௌத்த பிக்குகளின் நலன்கருதி நாடாளுமன்றத்திற்குள் தனியான உணவுச்சாலை ஒன்றும் தனியாக ஓய்வறை ஒன்றும் அமைக்கப்படவுள்ளதுடன் பல விஷேட ஒழுங்குகளும் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன.

ஹெல உறுமயக் கட்சியின் சார்பில் 13 ஆவது நாடாளுமன்றத்தில் 9 பிக்குகள் தெரிவாகியுள்ளனர். இவர்களுக்கான புதிய உணவுச்சாலையில் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த உணவுச்சாலையில் சமைத்து வழங்குவதற்கு திட்டமிடப்படடுள்ளது.

ஹெல உறுமய கட்சியின் தலைவராக விளங்கும் பௌத்த மதகுருவுக்கு எதிர்க்கட்சியின் முன்வரிசையில் ஆசனம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டதுடன் ஏனைய பௌத்த பிக்குகள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பின்வரிசையில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

# ஜே.வி.பியுடனான பிரச்சினை விரைவில் தீர்க்கப்படக்கூடியதே

## அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தில் அமைச்சர்கள் நியமனத்தில் ஜே.வி.பியுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக விரைவில் தீர்வு காணமுடியும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் சக்தி மற்றும் மின்சக்தி அமைச்சருமான சுசில் பிறேம ஜயந்த தெரிவித்தார்.

அமைச்சர்கள் நியமனத்தில் ஏற்பட்டிருக்கும் அதிருப்தி காரணமாக ஜே.வி.பி. சார்பில் அமைச்சர்களாக பிரேரிக்கப்பட்ட நான்கு அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் தமது பதவிகளைப் பெறுப்பேற்கவில்லை.

அந்தச் சிக்கலால் ஜே.வி.பி. - அரசாங்கத்துக்கான தனது ஆதரவை விலக்கிக்கொள்ள நேரிடலாம் எனவும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் எச்சரித்திருந்தது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த ஜே.வி.பிக்கு ஒதுக்கப்பட்ட அமைச்சர்கள் மகாவலி அபிவிருத்தித் திட்டம் மற்றும் திரைப்படக் கூட்டுத்தாபனம் போன்றவற்றின் மீதான கட்டுப்பாட்டுள் இல்லாதமையால் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளை கலந்துரையாடல்கள் மூலம் தவிர்க்கமுடியும்.

இது சம்பந்தமாக ஒரு சில நாட்களுக்குள் பேச்சுக்கள் நடத்தப்பட்டு பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, தமக்கு ஒதுக்கப்பட்ட அமைச்சுக்களில் குறிப்பிட்ட துறைகள் மீதான அதிகாரங்கள் வழங்கப்படாவிட்டால் அமைச்சரைவையில் அமைச்சர்களாக பதவியேற்காமலேயே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டணியில் இ ணந்து செயற்படுவது என ஜே.வி.பியின் அரசியல் குழுக் கூட்டத்தில் தீர்மானித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**புலம்பெயர் வாழ்வின் பதிவுகள்** XLIV **சிவா சின்னப்பொடி**

# பெற்றோரின் நிதானமான செயற்பாட்டினால் பல பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும்

அவளை பிரான்சில் வைத்திருந்தால் திரும்பவும் காதலனுடன் ஓடிவிடுவாள் என்று நினைத்த அவளின் பெற்றோர் - அவளை லண்டனுக்கு அனுப்பிவைக்கத் திட்டமிட்டனர். அந்தப் பெண்ணும் பெற்றோரின் சொல்லைக் கேட்டு நடப்பவள்போல பாவனைசெய்து கொண்டு - தனது தம்பியின் உதவியுடன் தனது காதலனுடன் தொடர்புகொண்டு திரும்பவும் வீட்டைவிட்டு வெளியேறி அவனுடன் சென்றுவிட்டாள்.

தான்பெற்ற மகள் தனக்குச் சவால் விடுவதா? என்ற ஆத்திரத்தின் உச்சிக்குச் சென்ற அந்தப் பெண்ணின் தந்தை - மறுபடியும் அந்தக் கலகக்குழுவினருக்கு நிறையப் பணம் கொடுத்து - அவர்கள் இரண்டு பேரையும் கொலை செய்யும்படி கூறியிருந்தார். மறுபடியும் அந்தக் கலகக்குழுவினர் பாரிஸிலும் அதன் புறநகர்ப்பகுதியிலும் வலைவிரித்து தேடி - அந்தப் பெண்ணும் அவள் காதலனும் தங்கியிருக்கும் இடத்து முகவரியைக் கண்டுபிடித்தனர்.

இந்தமுறை அவர்கள் பாரிசிலிருந்து 200 கிலோமீற்றர் தொலைவிலுள்ள வேறொரு நகரத்தில் தங்கியிருந்தனர்.

அந்தக் கலகக்குழு - பெரியதொரு தாக்குதலுக்குப் புறப்படுவதுபோல் இரண்டு மூன்று கார்களில் ஆயுதங்களுடன் சென்று, அவர்கள் இருந்த வீட்டை முற்றுகையிட்டபோது, அந்தப் பெண் மட்டுமே அகப்பட்டுக்கொண்டாள். அவள் காதலன் அந்தநேரத்தில் வெளியில் சென்றிருந்ததால் தப்பித்துக்கொண்டான். அந்தப் பெண்ணை அடித்துச் சித்திரவதை செய்த அந்தக் குழுவினர், காரில ஏற்றி வந்து மறுபடியும் அவனது பெற்றோரிடம் ஒப்படைத்துவிட்டனர்.

அவளைப் பார்த்ததும் வெறிகொண்டவர்களைப்போல அவளது தந்தையும் தாயும் - அடி அடியென்று அடித்துச் சட்டையைக் கிழித்து - நகத்தால் பிறாண்டி, தாங்கள் பெத்தமகள் என்றுகூடப் பார்க்காமல் மோசமாகத் தாக்கினாகள். கடைசியில் ஒரு அறையொன்றில் தள்ளிப்பூட்டிவிட்டனர்.

அந்த அறையில் தொலைபேசி இருந்ததை அவர்களுக்கு இருந்த ஆத்திரத்தில் மறந்துவிட்டனர்.

அந்தப் பெண் காவல்துறையினருக்குத் தொலைபேசி எடுத்து தனது தந்தை தன்னை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்க முயற்சித்ததாகவும், தாயும் அதற்கு உடந்தையென்றும், தான் அதற்கு சம்மதிக்காததால் தன்னை அடித்துச் சித்திரவதை செய்து-அறையில் பூட்டி வைத்திருப்பதாகவும்-தெரிவித்தாள். அவள் கொடுத்த முகவரியின்படி அவளது வீட்டுக்குக் காவல்துறை அணி விரைந்து வந்து - அறையைத்தள்ளித் திறப்பித்துப் பார்த்தபோது, அந்தப் பெண் இருந்த கோலத்தைப் பார்த்து அதிர்ந்துவிட்டார்கள்.

என்ன நடந்தது என்று அந்தப் பெண்ணைப் பெற்றோருக்கு முன் வைத்து அவர்கள் விசாரித்தபோது, அந்தப் பெண் தொலைபேசியில் தெரிவித்த அதேவிடயத்தையே மறுபடியும் அப்படியே சொன்னாள்.

தனது அக்காவுக்குத் தனது தந்தையும் தாயும் செய்த கொடுமையைப் பார்த்து அதிர்ந்து போயிருந்த அந்தப் பெண்ணின் தம்பியும் - அக்கா சொல்வது உண்மை என்று காவல்துறையினருக்குச் சொல்ல, அந்தத் தந்தையும் தாயும் உடனடியாகக் கைது செய்யப்பட்டனர்.

வழக்கு விசாரணைக்கு வந்தபோது, உண்மையைச் சொல்லும்படி உறவினர்கள் அந்தப் பெண்ணிடம் மன்றாடியபோதும்கூட அவள் மறுத்துவிட்டாள். அவளது தம்பிகூட அக்காவின் பக்கமே நின்றுவிட்டான். அங்கே பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவுக்கே அர்த்தமில்லாமல் போய்விட்டது.

நீதிமன்றம் அந்தப் பெண்ணின் வாக்குமூலத்தையும், அவனது தம்பியின் சாட்சியையும் வைத்து - தந்தைக்கு 12 வருடச் சிறைத் தண்டனையும் தாய்க்கு 10 வருடச் சிறைத் தண்டனையும் விதித்தது. அந்தப் பெற்றோர் ஆத்திரப்படாமல் கொஞ்சம் நிதானமாகச் சிந்தித்திருந்தால், இந்த அவலம் நேராமல் தவிர்த்திருக்கலாம். சாதிவெறி கண்ணை மறைத்ததே இந்த பிரச்சினைக்கு அடிப்படையாக அமைந்தது.

புலம்பெயர் வாழ்வில குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய இன்னொரு பக்கம் முதியவர்களைப் பற்றியது.

இப்போது ஐரோப்பாவுக்குப் பெற்றோரையும் அழைப்பது ஒரு நாகரிகமாக மாறிவிட்டது.

ஐரோப்பிய குடியுரிமை பெற்றவர்கள் தங்களுக்குரிய அடிப்படை தகுதிகளைக் காட்டி, பெற்றோரை தாங்கள் வதியும் நாடுகளுக்கு அழைப்பதற்குப் பல நாடுகளின் குடியுரிமைச் சட்டங்களில் வழியிருக்கின்றது.

நம்மவர்கள் இப்போது அதிக அளவுக்கு இந்த சட்ட அனுகூலத்தைப் பயன்படுத்தி, பெற்றோரை அங்கு அழைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். ஒரு காலத்தில் பெற்றோரை பார்க்கவேண்டும், தாயகத்திலே தனிமையிலே யுத்தக் கெடுபிடிகளுக்கு மத்தியிலே அவர்களை விட்டுவிடக்கூடாது என்ற எண்ணப் போக்கு இருந்தது.

இப்போது அதிலேகூட சுயநலம் கலந்துவிட்டது. கணவனும் மனைவியும் வேலைக்கு செல்லும்போது வீட்டைப் பார்ப்பதற்கும், பிள்ளைகளைப் பராமரிப்பதற்கும், சம்பளம்



இல்லாத வேலைக்காரர்களாகப் பெற்றோர்களைக் கருதும் தன்மை தற்போது அதிகரித்து வருகிறது.

பொதுவாக இங்கே தாயகத்திலிருந்து மகன் அல்லது மகள் அனுப்பும் 'விசா' மூலம் ஐரோப்பாவுக்கு புறப்படும் பெற்றோர் - தங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளைப் பார்க்கும் ஆசையுடனேயே கிளம்பிச்செல்கிறார்கள். அங்கே சென்ற பின்புதான் தாங்கள் 'வீடு' என்ற சிறைக்குள் அடைக்கப்பட்ட கைதிகள் என்ற யதார்த்தம் அவர்களுக்குப் புரியவரும். முதலாவது அவர்களுக்கு அங்குள்ள காலநிலை ஒத்துவருவதில்லை.

குளிர்காலத்தில் கனத்த ஆடைகளை சுமந்து கொண்டு அவர்களால் நடமாட முடிவதில்லை. முக்கியமாக - இங்கே தாயகத்தில் தாங்கள் விரும்பியபடி விரும்பிய இடத்துக்குச் செல்வதுபோல், அங்கே தனியாகச் செல்ல முடியாது. அப்படிப் போனால் தொலைந்து விடுவார்கள் அல்லது வாகன ஓட்டத்தைப் பார்த்து அஞ்சி, ஒடுங்கி, நடுங்கி அவஸ்த்தைப்பட வேண்டிவிடும். அடுத்து சாப்பாடு - இங்கே தாயகத்தைப்போல நாவுக்கு ருசியாக புத்தம் புது பண்டங்களைக்கொண்டு தயாரித்த புத்தம் புது உணவை உண்ணமுடியாது.

ஒரு கிழமைக்கு முன்னம் உயிரை விட்ட கோழியையும், மீனையும், ஒரு மாதத்துக்கு முன்னம் உயிரைவிட்ட ஆட்டையும், மாட்டையும் - குளிர்சாதனப்பெட்டியிலிருந்து எடுத்து, புதிது என்று சொல்லிச் சமைத்து, அதை மீண்டும் குளிர்சாதனப்பெட்டியில் வைத்து மூன்று நான்கு நாட்களுக்கு சாப்பிடுவது-இவர்களுக்கு ஒத்துவராது. அதைவிட பிஸ்ஸா, பிரித் (உருளைக்கிழங்கு பொரியல்), ஸ்பக்கற்றி, குங்குஸ், மரிகேஸ், பொலனியேஸ் புரே (உருளைக்கிழங்கு மாவால் செய்யும் கழி) என்று வாய்க்குள் நுழையாத பெயர்களைக்கொண்ட சாப்பாடுகளும் இவர்களுக்கு ஒத்துவருவதில்லை. அங்கு போய்ச் சேர்ந்த ஒரு மாதம் பிள்ளைகளை, பேரப்பிள்ளைகளைப் பார்த்த சந்தோசத்தில் இவர்கள் மிதப்பார்கள்.

அந்த ஒரு மாதமும் தாயகத்திலிருந்து நீண்டகாலம் கழித்து வந்த அப்பா, அம்மா என்று நல்ல கவனிப்பு இருக்கும். காரிலோ, தொடருந்திலோ, பேருந்திலோ, மெத்திரோவிலோ அழைத்துச்சென்று சில இடங்களைக் காட்டுவார்கள்.

ஒரு மாதம் போனபின் அம்மா - அப்பா வீட்டைப் பார்த்துக்கொள்ளுங்கோ என்று சொல்லிவிட்டு, காலையில் பிள்ளைகள் வேலைக்குப் போய்விடுவார்கள். பிறகு பேரப்பிள்ளைகள் தாங்களாக எழும்பி வந்து, மக்கிரோ ஓவனில், காஸ் அடுப்பில், மின் அடுப்பில் பால் வைத்து குடிப்பார்கள் அல்லது அம்மா போட்டு பிளாஸ்ரிக்கில் ஊற்றி வைத்துவிட்டுப் போன பால், தேநீரைக் குடிப்பார்கள். பாண், சீஸ், ஜாம், ஜம்போன் (பதப்படுத்திய இறைச்சி) என்று காலைச் சாப்பாடும் சாப்பிடுவார்கள். சாப்பிட்டு முடிந்ததும் எடுத்ததை எடுத்த இடத்தில் வைக்காமல், அப்படியே விட்டுவிட்டுச் சென்றுவிடுவார்கள். பாட்டிக்கு அல்லது தாத்தாவுக்கு வேலை - அதை எடுத்து அடுககி வைப்பது, கோப்பைகளைக் கழுவுவது.

அதன்பின் அவர்களும் தேநீர் குடித்து பாணும் சாப்பிடுவார்கள். காலை 9 மணிக்கெல்லாம் வீடு வெறிச்சோடிப்போய்விடும். அவர்கள் மட்டும்தான் தனியே இருப்பார்கள்.

தொலைக்காட்சி போடத் தெரிந்தால் அதைப் போட்டுப் படம் பார்த்துக் கொண்டிருப்பார்கள். இல்லையென்றால் ஜன்னலோரம் நின்று அல்லது கதிரையைப் போட்டுக்கொண்டு தெருவைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். அதற்குள் மத்தியானம் ஆகிவிடும்.

மீண்டும் பேரப்பிள்ளைகள் மதிய உணவுக்கு வருவார்கள்.

பிஸ்ஸா அல்லது அம்மா செய்து குளிர்சாதனப்பெட்டியில் வைத்து விட்டுப்போன உணவை - மைக்கிரோ ஓவனில் சூடாக்கிச் சாப்பிடுவார்கள். பாட்டிக்கு அல்லது தாத்தாவுக்கும் கொடுப்பார்கள்.

ஒரு மணி நேரத்தில் மறுபடியும் அவர்கள் பாடசாலைக்குச் சென்றுவிடுவார்கள்.

*(தொடரும்...)*

**மருத்துவம்** **S.கமலேஸ்வரன்**

# நெருப்புக் காய்ச்சலை நெருங்கவிடாதீர்கள்!



*(நேற்றைய தொடர்ச்சி...)*

இந்தக் கிருமிகள் அவரை நோய்க்குரியவராக்குவதுடன், அடுத்தவர்களுக்குத் தொற்றுவதற்காக இலவசமாகத் தனது சகாக்களையும், நோயாளியின் மலக்கழிவுகளினூடாக அனுப்பி வைக்கின்றது.

இனி நெருப்புக்காய்ச்சலுக்குட்பட்ட ஓர் நோயாளியின் நோய்த்தாக்கம், நோய்க்கான குணங்குறிகள், அறிகுறிகள் பற்றிப் பார்ப்போமாயின் -

தொற்றுதலுக்குள்ளான ஒருவருக்குச் சுமார் 14 நாட்களுக்குப் பின்னரே நோய்க்கான குணங்குறிகள் மற்றும் அறிகுறிகள் வெளிக்காட்ட அல்லது வெளிப்பட ஆரம்பிக்கின்றன. நெருப்புக்காய்ச்சலுக்குரிய பொதுவான குணங்குறிகள் மற்றும் அறிகுறிகளாகத் தலையிடியுடன் கூடிய தொடர்ச்சியான, அதேவேளை-தீவிரமான காய்ச்சல் (நெருப்புக்காய்ச்சல்) பசியின்மை, இருமல் என்பவற்றுடன், வாந்தியுடன் கூடிய வயிற்றோட்டமும் ஏற்படலாம். நெருப்புககாய்ச்சல் கடுமையாக்கப்படின் இரத்தப்போக்குக்கூட ஏற்படும் சந்தர்ப்பமுள்ளது.

இந்தவகையில், ஏற்படும் காய்ச்சலானது சுமாராக 1 தொடக்கம் 8 கிழமைகள் வரை நீடிக்கலாம். ஒப்பீட்டளவில் நோய் எதிர்ப்புத்திறனை குறைந்தளவு கொண்டிருக்கும் இளம் பிள்ளைகள், குழந்தைகள், ஏன் வளர்ந்தவர்கள்கூட இந்தநோயின் தாக்கத்திற்கு உட்படலாம். நெருப்புக்காய்ச்சல் என்று உறுதிப்படுத்தித் தகுந்த கவனிப்பிற்குள் கொண்டு வராத பட்சத்தில் - காய்ச்சல் தீவிரமடைந்து மரணத்தைக்கூட விளைவிக்கலாம். இன்றையநிலையில் யாழ்பாணத்தில் மரணம் சம்பவித்திருக்கிறது என்பதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

சரி இவ்வளவு தீவிரமானதோர் தொற்றுநோய் ஆரம்பத்தில் எவ்வாறு அமைகின்றது எனப்பார்ப்போம். நெருப்புக்காய்ச்சலை ஏற்படுத்தும் குறித்தவகை **Salmonella** பற்றீரியாக்களின் விருப்பத்திற்குரிய வாழிடமாக- உடன் கறந்த பசுப்பால் மற்றும் கழிவுநீர் அல்லது நுண்ணங்கிகள் அதிகளவில் செறிந்து வாழும் தண்ணீரைக்கொண்டு உருவாக்கப்படும் உணவுப் பண்டங்கள் (குளிர்களி, குளிர்பானம்), நேரிடையாக உள்ளெடுக்கப்படும் குடிநீர் போன்றவை அமைகின்றன.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் மக்கள் செறிந்துவாழும் நகர்ப்புறங்களில் ஓர் வீட்டிற்கான சூழல் இந்தவகை நோயிற்கு உகந்த வாய்ப்பாகவுள்ளது. அதாவது கிணற்றுக்கு மிக அண்மையாக அமையும் கழிப்பறைக் கிடங்கு அல்லது கழிப்பறைக்குப் பக்கத்தில் அமையும் சமையற்கூடம் என்றவாறு எமது வீட்டுச்சூழல் அமைவதனால், மிக இலகுவாக நெருப்புக்காய்ச்சலுக்கான நோய்க் கிருமிகளின் வாழ்விடம் உருவாக்கப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலை வீடுகளில் மட்டுமன்றி, பெரும்பாலான உணவு விடுதிகள், குளிர்பான நிலையங்கள், உணவு விற்பனை நிலையம் முதலியவற்றிலும் காணப்படுகிறது. இவ்வாறான இடங்களில் தற் சுகாதாரம், பொதுச்சுகாதாரம் இரண்டுமே சரியானமுறையில் கடைப்பிடிக்கப் படல்வேண்டும்.

அந்த வகையில் நெருப்புக்காய்ச்சல் தாக்கத்திலிருந்து எவ்வாறு தப்பித்துக்கொள்ளலாம் அல்லது தொற்றுதலை எவ்வாறு தவிர்த்துக்கொள்ளலாம் என்பது பற்றி இனி ஆராய்வோம்.

பொதுவாக இரண்டு வழிகளின்மூலம் நாம் நோய்த்தடுப்பு முறைகளை மேற்கொள்ளலாம். ஒன்று - ஆரம்பத்திலேயே நோய்க்கிருமிகளின் தாக்கத்தைத் தடுப்பது. மற்றையது - நோயின் தொற்றல் அவதானிக்கப்பட்ட பின்னர் பொருத்தமான தடுப்புமுறைகளைக் கையாளுவதன் மூலம் அதை மேலும் பரவாது கட்டுப்படுத்தல். தொற்றுநோய்களைக் பொறுத்தவரை மேற்சொல்லப்பட்ட இரண்டு வழிமுறைகளுமே அவசியமானவையாக உள்ளன.

நெருப்புக்காய்ச்சலுக்கான ஆரம்பத்தடுப்பு முறைகளாக - நன்கு கொதித்தாறிய நீரினை குடிநீருக்கும், சுத்தமான நீரை உணவுப்பண்டங்கள் தயாரிப்பிலும் பயன்படுத்துதல். மனிதக் கழிவுகள் மற்றும் ஏனைய வீட்டுக்கழிவுகளை பொருத்தமானமுறையில் அகற்றுவதன் மூலம், நோய்க்கிருமிகளுக்கு உகந்த சூழ்நிலையைத் தவிர்த்துக்கொள்ளாம். கழிப்பறைக்கும் கிணறு மற்றும் சமையற்கூடத்திற்கும் இடையேயான இடைவெளிகளைப் பொருததமானமுறையில் பேணுதல் என்பவற்றுடன், நெருப்புக் காய்ச்சல் நோய்க்கிருமிகளின் நோய்க்காவிகளாகச் செயற்படும் வீட்டு ஈக்கள் மற்றும் ஏனைய பூச்சிகள், ஊர்வன என்பனவற்றையும் கட்டுப்படுத்துதலும் அடங்கும்.

நெருப்புக்காய்ச்சல், வாந்திபேதி, வயிற்றுளைவு போன்ற பல தொற்றுநோய்களுக்குத் தெருவோர தின்பண்ட விற்பனை நிலையங்கள் மற்றும் தெருவோர குளிர்பான விற்பனை நிலையங்கள், கோயிற்திருவிழாக்கள், கேளிக்கை நிகழ்வுகளில் அமைக்கப்படும் தற்காலிக உணவு விற்பனை நிலையங்கள், குளிர்பான விற்பனை நிலையங்கள் என்பவற்றின் பொறுப்பற்ற பிழையான சுகாதார நடவடிக்கைகள் காரணங்களாக உள்ளன.

குளிர்பானங்கள் என்ற பெயரில் விற்பனை செய்யப்படும் பல குடிபானங்கள் - முறையற்ற வகையில் தயாரிக்கப்படுவதுடன், தயாரிப்பில் பயன்படும் நீர் சுகாதாரமற்று இருப்பதும் இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது. ஒட்டுமொத்தமாக எல்லா உணவு விற்பனை நிலையங்களும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்லமுடியாது.

பணத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயற்படும் இவ்வாறான உணவு மற்றும் குளிர்பான விற்பனை நிலையங்கள் - தகுந்த முறையில் பொதுச் சுகாதார மற்றும் தற்சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கைக்கொண்டால், நெருப்புக் காய்ச்சல் போன்ற தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுப்பதில் முக்கிய பங்கெடுக்கும் என்பதில் ஐயமில்லை.

நெருப்புக் காய்ச்சல் தொற்றுநோயை முளையிலேயே கிள்ளியெறிய யாவரும் முன்னிற்போம்.

*

# உடல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் 4 வெளிநாட்டவர்களின் சடலங்கள் பாக்தாத்தின் தென்பகுதியில் மீட்பு!



உடல்கள் துண்டாடப்பட்ட நிலையில் நான்கு வெளிநாட்டவரின் சடலங்கள் பாக்தாத்தின் தென்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க செயலகம் தெரிவித்தது.

இந்த சடலங்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லையெனவும் ஆனாலும் சென்ற வாரம் காணாமல் போயிருந்த ஈராக்கின் கட்டுமான பணிகளை மேற்கொள்ளவந்த 4 அமெரிக்க ஒப்பந்தகாரர்களுடையதாக இவை இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், ஈராக்கிலுள்ள வெளிநாட்டவரை வெளியேறுமாறு அமெரிக்க அரசு கோரியுள்ளது. அத்துடன், ஈராக்கில் 12 நாடுகளைச் சேர்ந்த 40 பேர்வரை பணயக்கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கக்கூட்டுப்படையின் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை எண்ணை வழங்கும் தொடரணி ஒன்றின்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது 2 அமெரிக்க படையினரும், 7 அமெரிக்க எண்ணைக் கம்பனி ஊழியர்களும் பணயக் கைதிகளாக சதாம் ஆதரவாளரால் பிடிக்கப்பட்டிருந்தார்கள்.

இவர்கள் காணாமல் போயுள்ளது தொடர்பாக அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

சடலங்கள் காணப்பட்ட இடத்திற்கு அருகில் தொடரணிமீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடம் அமைந்துள்ளதால் ,இந்த நான்கு சடலங்களும் பணயக்கைதிகளுடையதாக இருக்கலாமென அமெரிக்க இராஜாங்க செயலக அதிகாரியொருவர் எ.எப்.பி செய்தி ஸ்தாபனத்திற்கு தெரிவித்தார்.

கடத்தப்பட்டவர்களில் 43 வயதுடைய லொறிச் சாரதியான 'தோமஷ் கமில்' அராபிய தொலைக்காட்சியில் தோன்றியபோது தெரிவித்த கருத்தில் பலூஜாவிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறத்தவறினால் தன்னைக் கொலை செய்யப்போவதாக பணயக் கைதிகளை வைத்துள்ளவர்கள் பயமுறுத்தியதாக தெரிவித்தார்.

தொடரும் கடத்தல் சம்பவங்களில் இறுதியாக நேற்று பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் பணயக்கைதியாக பிடிக்கப்பட்டுள்ளார். ஈராக்கில் அதிக அளவில் வெளிநாட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சென்ற வியாழக்கிழமை காணாமல்போன 3 ஜப்பானியர்கள் தொடர்பாக எதுவித தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை ஈராக்கில் அதிக அளிவிலான கட்டுமான பணிகளை ரஷ்ய கம்பனியான 'ரெக்புரோம்' மேற்கொண்டிருந்தது.

இந்தக் கடத்தல் சம்பவங்களையடுத்து 370 பணியாளர்களை ரஷ்யா மீளவும் நாட்டிற்கு அழைத்துள்ளது.

## உலக நோக்கு

# ஜோர்தான் தலைநகரில் சந்தேக நபர் பலர் கைது

(அம்மான்)

ஜோர்தான் தலைநகர் அம்மானில் கடந்த இருவாரங்களில் பயங்கரவாத சந்தேக நபர்கள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தலைநகரில் பயமுறுத்தல்களை மேற்கொண்டிருந்தார்கள் எனவும், இவர்களின் கைதுகளால், பாரிய தாக்குதல் ஒன்று உரிய நேரத்தில் தடுக்கப்பட்டுள்ளது என மன்னர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதனுடன் சம்பந்தப்பட்டுள்ள மற்றவர்களை தேடும்பணி தொடர்வதாகவும் மன்னர் அப்துல்லா மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை தொடர்பாக ஜோர்தானில் புலனாய்வுப் பிரிவின் தலைவருக்கு நன்றி தெரிவித்து கடிதம் ஒன்றினை மன்னர் அப்துல்லா அனுப்பியுள்ளார்.

இந்த சந்தேக நபர்களின் கைதுகளால் ஆயிரக்கணக்கான உயிர்கள் உரிய நேரத்தில் காப்பாற்றப்பட்டுள்ளது எனவும், மன்னர் தெரிவித்தார்.

பாரிய அளவிலான வெடிபொருட்கள் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது எனவும், பாரிய அனர்த்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதல் திட்டத்திற்கான முயற்சிகளை மேற்கொண்டவர்கள் தொடர்பாக மன்னர் எதுவிதமான கருத்துக்களையும் வெளியிடாதபோதும் இத்தாக்குதலுக்கான திட்டத்தை அல்கொய்டாவே மேற்கொண்டதாக அமெரிக்க



அரசு தெரிவித்துள்ளது. தலைநகர் அம்மானில் அமைந்துள்ள அமெரிக்க தூதுவராலயத்தை தாக்குவதற்கே இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை, கார் ஒன்றில் வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இவை ஜோர்தானில் அமைந்துள்ள அமெரிக்க அமைப்புக்களைத் தாக்குவதற்கு பாதாள உலக கோஷ்டியினரின் முயற்சிகள் என ஜோர்தானின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சவுதியில் 4 பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டனர்

சவுதி அரேபியாவின் தலைநகர் ரியாட்டில் முஸ்லிம் தீவிரவாதிகளால் நான்கு பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். குஎாசிம் மாகாணத்தில் காவல் கடமையில் ஈடுபட்ட அதிகாரிகள் சோதனைக்காக காரொன்றைத் தடுத்து நிறுத்தியபோது முஸ்லிம் தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட பின்னர் தப்பிச்சென்றுள்ளார்கள்.

இவர்கள் திருடப்பட்ட பொலிஸாரின் இரண்டு கார்களில் தப்பிச்சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. பிறிதொரு சம்பவத்தில் துப்பாக்கிச் சமரில் பொலிஸ் அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஹெலிக்கொப்ரர்கள் மூலம் தேடுதல் மேற்கொள்ளப்பட்டவேளையில் பாலைவனமொன்றில் இரு கார்கள் வெடிப்பொருட்கள் நிரப்பப்பட்டும், மூன்றாவது கார் ஆயுதங்களுடன் காணப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது.

வெடிப்பொருட்கள் செயலிழப்பு செய்யப்பட்டு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. பயங்கரவாதிகள் அடையாளம் காணப்பட்டு துரத்திச் செல்லப்பட்ட வேளையில் 'உனைசா' நகரின் பகுதிக்குள் ஒழிந்து கொண்டதாகவும், தேடும்பணி தொடர்வதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சவுதி உள்துறை அமைச்சு வெளியிட்ட கருத்தில் முஸ்லிம்களில் உள்ள சிறுபான்மையினராலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதெனத் தெரிவித்தது.

# மிலோசெவிச்சிற்கெதிரான விசாரணை யூன் 8 இல் சர்வதேச நீதிமன்றில் ஆரம்பம்

ஐக்கிய நாடுகளின் சர்வதேச நீதிமன்றம் மீண்டும் முன்னாள் யூகோசிலாவியாவின் ஜனாதிபதி ஸ்லோபொடன் மிலோசெவிக்கின் குற்றங்களுக்கெதிரான விசாரணைகளை யூன் மாதம் எட்டாம் திகதி நடத்தவுள்ளது. தனது சாட்சிகளாக சிலரது பெயர்களை தெரிவுசெய்துள்ளதாக மிலோசெவிக் தெரிவித்தார்.

இந்தப் பெயர்ப் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனும், இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயரும் அடங்கியுள்ளனர். இந்தத் தகவல்களை முன்னாள் ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் தெரிவித்தார்.

இவர் தனது சாட்சிக்காக 1631 மக்களை தெரிந்தெடுத்துள்ளார். இதேவேளை, எவரை வாக்குமூலம் அளிப்பதற்கு அனுமதிப்பதென நீதிமன்றம் தீர்மானிக்குமென பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டுகளில் மனிதப் படுகொலைகளையும், மனித இனத்திற்கெதிரான குற்றங்களையும், பொஷ்னியா, கொரொரியா கொசோவா ஆகிய நாடுகளில் மேற்கொண்டிருந்தார். தன், மீது தொடரப்பட்ட குற்றங்களை தொடர்ந்து இவர் மறுத்துள்ளார்.

அத்துடன், சர்வதேச நீதிமன்றத்திற்கு தன்னை விசாரணை செய்ய உரிமை கிடையாதெனவும் வாதிட்டார். இதுவரை நடைபெற்ற விசாரணைகளில் மிலோசெவிக் குற்றமற்றவர் எனப் பதியப்பட்டுள்ளது.

மிலோசெவிக் சட்டப்படிப்பினை மேற்கொண்டவர். இதனால் தன்மீது தெரிவிக்கப்பட்ட குற்றங்களுக்கெதிராக வாதாடியுள்ளார்.



சாட்சியங்களுக்கெதிராக குறுக்கு விசாரணைகளை பலமுறை மேற்கொண்டுள்ளார். அத்துடன், போர்க்கால குற்றவாளிகளுக்கான சர்வதேச நீதிமன்றம் பலமுறை மிலோசெவிக்கிற்கெதிரான விசாரணைகள் நிறுத்தியிருந்தது. இதற்கு மிலோசெவிக் இரத்த அழுத்தம், இதயநோய் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டிருந்தமையே காரணமாகும்.

# செப் 11 தாக்குதலுக்கு முன்னர் ஜோஜ் புஷ் செயற்பட்டது சரியாம்

## அமெரிக்க சட்டமா அதிபர் தெரிவிப்பு

அமெரிக்காவின் சட்டமா அதிபரான ஜோன் ஆஷ் கொரொப்ற் அதிபர் புஷ் செப்டம்பர் தாக்குதலுக்கு முன் செயற்பட்டமுறை சரியாதென வாதிட்டார்.

செப்டம்பர் 11 ஆணைக்குழுவிற்கு சாட்சியமளித்த ஜோன் பயங்கரவாதம் தொடர்பாக அதிபர் புஷ்ஷின் நடவடிக்கைகளை முன்னாள் ஜனாதிபதி கிளின்டனின் அரசியல் கொள்கைகள் நன்கு செயல்ப்படுத்தமுடியாது செய்துள்ளன என தெரிவித்தார்.

அத்துடன், கிளின்டன் நிர்வாகத்தின் கொள்கைகள் புலனாய்வுத்துறையையும் நாட்டின் பாதுகாப்புச் சேவையிலிருந்தவர்களையும் பெருமளவு பாதித்திருந்தன என ஜோன் தெரிவித்தார். அத்துடன், எதிரி தொடர்பான தகவல்களை கடந்த 10 ஆண்டுகளாக சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்காவின் வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் தாக்கப்பட்டபோது பின்லாடனை தேடிப்பிடித்து கொல்லவேண்டுமென புஷ் கட்டளை பிறப்பித்திருந்ததாகவும் தெரிவித்தார். இதே செப்டம்பர் 11 தாக்குதல் காலத்தில் உருவாக்கப்பட்ட தேசப்பற்றாளர் சட்டம் பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்பாடுகளை வலுப்படுத்தியுள்ளதெனவும் தெரிவித்தார்.



# தென்னாபிரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல்

தென் ஆபிரிக்காவில் மூன்றாவது பொதுத் தேர்தலில் மக்கள் உற்சாகமாக வாக்களித்துள்ளனர். நீண்ட வரிசையில் மக்கள் தேர்தல் நிலையங்களில் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் ஆபிரிக்கன் தேசிய காங்கிரஸ் வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 21 மில்லியன் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்கவுள்ளனர். தென்னாபிரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி தபோ மெபேகி இரண்டாவது முறையும் வெற்றிபெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, எச்.ஐ.வி, பாலியல் நோய்களை கட்டுப்படுத்துவதற்கு தபோ மெபேகி தவறியுள்ளார் என விமர்சிக்கப்பட்டிருந்தார். அத்துடன், வறுமை, வேலையில்லாப் பிரச்சினை, குற்றங்கள் நாட்டில் அதிகரித்துள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, எதிர்க்கட்சியினரும் ஓரளவு வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் பி.பி.சி. இன் 'பார்னபி' தெரிவித்தார்.

# ஈராக்கில் அமைதியை ஏற்படுத்த அமெரிக்கா தொடர்ந்து ஈடுபடும்



## ஜனாதிபதி புஷ் தெரிவிப்பு

ஈராக்கில் அமெரிக்கப்படைகளுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் எதிரான வன்முறைகள் அதிகரித்தபோதிலும், தனது பணிகளை நிறைவேற்றுவதற்காக தொடர்ந்து செயற்படவுள்ளதாக அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார்.

ஈராக்கில் ஜனநாயகத்தை மீட்டுக்கொள்வதற்கு தேவைப்படும் படையினரையும், சேவைகளையும் வழங்குவதற்கு தயாராகவுள்ளதாகவும் தற்போது ஈராக்கில் நடைபெறும் குழப்பங்களுக்கு அந்த நாட்டில் காணப்படும் குழுக்களே காரணமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, யூன் மாதம் 30 ஆம் திகதி ஈராக் மக்களிடம் ஆட்சிப் பொறுப்பு கையளிக்கப்படும் எனவும் தெரிவித்தார். தொலைக்காட்சி உரையொன்றில் மேலும் குறிப்பிடும்போது ஈராக்கில் தற்போது நடைபெறும் வன்முறைகள் மொத்த மக்களினதும், பிரதிபலிப்பு அல்ல எனத் தெரிவித்தார்.

ஈராக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கப்படைகள் முழுமையாக செயற்பட்டுவருகின்ற வேளையில், ஐக்கிய நாடுகளின் பிரேரணை ஒன்றின் மூலம் ஈராக்கை புனரமைப்பதற்கு உதவவேண்டும் என அதிபர் புஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளால் விடுவிக்கப்பட்ட சிறுவர்கள் வீடு திரும்பினர்!

## யுனிசெப் பிரதிநிதி தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் யுனிசெப்பிடம் கையளிக்கப்பட்ட சிறுவர்கள் - பெற்றோர்களுடன் தமது வீடுகளுக்குச் சென்றுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட யுனிசெப் பிரதிநிதி அன்றியா ஜேம்ஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - கதிரவெளி பாடசாலையில் வைத்து கருணாவுடன் இணைந்து செயற்பட்ட 18 வயதுக்குட்பட்டோர் மற்றும் வீடுகளுக்குச் செல்ல விரும்பியோர் என 269 பேரை பெற்றோர் மற்றும் யுனிசெப் பிரதிநிதிகளிடம் புலிகள் கையளித்திருந்தனர்.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே யுனிசெப் பிரதிநிதி அன்றியா ஜேம்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தமிழீழ விடுதலைப் புலிகள் எந்த நிபந்தனையுமின்றி பெருந்தொகையான சிறுவர்களை தமது அமைப்பிலிருந்து விலகிச்செல்ல அனுமதித்துள்ளமை வரவேற்கத்தக்க ஒரு செயலாகும்.

அவர்களால் கையளிக்கப்பட்ட சிறுவர்கள், தமது பெற்றோர்களுடன் மகிழ்வாக வீடுகளுக்குத் திரும்பிச் சென்றுள்ளனர். அவர்களின் கல்வி மற்றும் அபிவிருத்தி விடயங்களில் தாம் ஆர்வமாக செயற்படவுள்ளதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறுவர் நலன்புரி நிலையம் அமைக்கும் முயற்சிகள் 'யுனிசெப்' ஆல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றபோதும் தற்போது விடுவிக்கப்பட்ட சிறுவர்களுக்கு அவ்வாறான ஒரு நிலையம் தேவைப்படாது எனத் தெரிவித்தார்.

# பருத்தித்துறைக்கு நேராகச் சூரியன்; இன்று கடுமையான வெப்பம் நிலவும்!

## வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

பருத்தித்துறை, காங்கேசன்துறைப பகுதிகள்மீது இன்று சூரியனின் நேரடிக் கதிர்வீச்சு கிடைக்கவுள்ளதால், அப்பகுதியில் அதிக வெப்பம் நிலவும் சாத்தியக்கூறு தென்படுவதாக இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுமாலை அறிவித்தது.

இன்று நாடு முழுவதிலும் பரந்துபட்ட அளவில் மழைபெய்வதற்கு வாய்ப்பிருப்பதுடன் கடற்கரையை அண்டிய பகுதிகளில் கடுமையான காற்று வீசுவதற்கும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

இதனால், கடலில் தொழிலுக்குச் செல்வோர் அவதானத்துடன் நடந்துகொள்வதுடன், காலநிலையை அவதானித்தே தமது பணிக்குச் செல்வது நல்லது எனவும், தம்மைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய முன்னாயத்தத்துடன் கடற்தொழிலாளா தமது பணிக்குச் செல்வது நல்லதெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச கல்வித்திட்டத்தின் கீழ்

# நூறு நாடுகளின் சிறுவர்கள் பங்கேற்கும் கூட்டம் கொழும்பில்!

சர்வதேச கல்வித்திட்டத்தின் கீழ், நூறு நாடுகளின் சிறுவர்கள் பங்குபற்றும் கல்விச் செயலமர்வொன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இலங்கைக்கான சிறுவர் பாதுகாப்புச் செயலகம் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அடுத்த வாரம் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில், 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடுகளின் தலைவர்கள், சமூக நல அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் மத்தியில் கல்விக்கு வழங்கப்படவேண்டிய முக்கியத்துவம், பல்லின சிறுவர்கள் குறித்த நடைமுறை விடயங்கள் முதலியன இந்தச் செயலமர்வில் கலந்துரையாடப்படவுள்ளன.

இங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள், நடைமுறைகள் குறித்து மாநாட்டில் கலந்துகொள்ளும் சிறுவர்களின் நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது. சிறுவர் விடயத்தில் அனைத்து நாடுகளும் அதிக கவனம் செலுத்துவது அவசியம் என்பதால், அதன் முதற்கட்ட நடவடிக்கையாக இந்தக் கூட்டம் இடம்பெறுவதாகவும், தொடர்ந்தும் சர்வதேச ரீதியில் பல செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளதாகவும் சர்வதேச கல்வித்திட்ட ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

## யுத்தத்துக்கு

செயற்பட்டுவருகிறது.

இதற்காக இலங்கையிடம் பல கருத்துக்களை முன்வைத்துள்ளது.

அனைத்து மக்களும் மனககசப்பற்ற வாழ்க்கையை வாழ சமாதான முயற்சி வெற்றிபெறவேண்டும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## தமிழ்த்தேசிய...

கட்ட நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயவுள்ளனர்.

கருணாவின் பிரதேசவாதப் பிரச்சினைகள் உருவான காலப்பகுதியில், உயிரையும் துச்சமென மதித்து, தமிழ்த் தேசியத்திற்காகவும் தமிழீழ தேசியத் தலைமைக்காகவும் துணிந்து குரல்கொடுத்த ஜோசப் பரராஜசிங்கம் , இந்த சந்திப்பின்போது, விசேட பாராட்டுதல்களைப் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கதிரவெளி மோதலில் போராளி வீரச்சாவு

மட்டக்களப்பில் கருணா குழுவினருடனான மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

லெப்டினன் இராமநாதன் (செல்வம் இராஜேந்திரம்) மட்டக்களப்பு என்ற போராளியே வீரச்சாவைத் தழுவிக்கொண்டவராவார்.

இவர் மட்டக்களப்பின் கதிரவெளிப் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற மோதலிலேயே வீரச்சாவைத் தழுவிக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீலனின் வித்துடல் இன்று புதுக்குடியிருப்புக்கு

கருணாவால் சுட்டுக் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட் உதவிப் புலனாய்வுப் பொறுப்பாளர் லெப்.கேணல் நீலனின் வித்துடல் இன்று புதுக்குடியிருப்புக்கு எடுத்துவரப்படவுள்ளது.

கருணா மட்டக்களப்பிலிருந்து தப்பியோடுவதற்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த நீலன் கருணாவின் மருதம் முகாமில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இன்று இவரது வித்துடல் மட்டக்களப்பிலிருந்து வன்னிக்கு எடுத்துவரப்பட்டு மக்கள் அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் விதைக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு மக்கள் அஞ்சலி செலுத்தியபின்னர் அங்கிருந்து வவுனியாவுக்கு காலை பத்துமணிக்கு கொண்டுவரப்பட்டு அஞ்சலி நடைபெறும்.

பின்னர் புதுக்குடியிருப்புக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அஞ்சலி முடிவடைந்ததும் விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் விதைக்கப்படும் என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன. (202)

## கருணா அணியை...

இவர்களை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

மேற்படி குழுவினர் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனவும், கைது செய்யப்பட்டபோது ஆபத்தான ஆயுதங்கள் வைத்திருந்ததாக ும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மட்டக்களப்பு பகுதி மக்கள் வெளியிட்டுள்ள தகவலில் - வடபகுதி மக்களை கிழக்கிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்ட கருணா அணியைச் சேர்நதவர்களில் சச்சு மாஸ்ரரும் ஒருவர் எனத் தெரிவித்தனர்.

## புதிதாகத் தெரிவான எம்.பிக்களை

# நாடாளுமன்ற செயலாளரை சந்திக்குமாறு கோரிக்கை!

புதிதாகத் தெரிவான எம்.பிக்கள், நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்தை உடனடியாகச் சந்திக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆவணங்களை வழங்குவதற்கும் அவர்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகவுமே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மூன்று நாட்களுக்குள் அவர்கள் தொடர்பு கொள்ளவேண்டுமெனவும் அந்த அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி 13 ஆவது நாடாளுமன்றத்திற்கான முதலாவது கூட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன்போது சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தலைவர் ஆகியோர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

எதிர்வரும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ள முதலாவது நாடாளுமன்றக் கூட்டத்தில் மட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரும்பிய ஆசனங்களில் அமரமுடியுமெனவும் - ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆசனங்கள் ஒதுக்கப்பட்டதும் தத்தமது ஆசனங்களிலேயே அவர்கள் அமரமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பௌத்த பிக்குகளுக்கான ஆசனங்கள் விசேடமாக அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் நடந்த கைகலப்பில் பொலிஸார் உட்பட மூவர் காயம்!

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடம்பெற்ற கைகலப்பில் ஒரு பொலிஸார் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

சிதம்பரபுரம் பகுதியில் இரு குழுக்கள் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தனர். அவ்வேளையில் அவ்விடத்திற்கு மது போதையில் வந்த பொலிஸ் குழுவினர் இவர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். இந்த வாய்த்தர்க்கம் முற்றி இருதரப்பினரிடையேயும் கைகலப்பாக மாறியது.

இந்தச சம்பவத்தில் படுகாயமடைநத ஒரு பொலிஸாரும் இரண்டு பொதுமக்களும் வவுனியா வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் கடும் காயங்களுக்குள்ளான ஒரு பொதுமகன் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுனுப்பி வைக்கப்பட்டார்.

இச்சம்பவத்தில் மேலும் இருவர் சிறுகாயங்களுக்குள்ளாகி வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று சென்றுள்ளனர். (03)

## தான் ஒரு பிரகாசமான...

அவ்வகையில், தாயகத்திலிருந்து கருணாவை அப்புறப்படுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் பாரியளவு உயிரிழப்புக்களைத் தவிர்த்து மேற்கொண்ட நடவடிக்கை குறித்து கட்டுரையாசிரியர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கருணா விவகாரத்தை விடுதலைப் புலிகள் எவ்வாறு கையாளப்போகின்றார்கள் என அமெரிக்க மற்றும் ஐரோப்பிய இராஜதந்திரிகள் கரிசனை கொண்டிருந்த வேளையில், இப்பிரச்சினையை விடுதலைப் புலிகள் கையாண்டவிதம் குறித்து வியப்புத் தெரிவித்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

அதேவேளை, கருணா விவகாரத்தை தமக்கு சாதகமாகப் பயன்படுத்த ஜனாதிபதி சந்திரிகாவும், சிங்களப் பௌத்த தேசிய வாதமும் முயற்சிகளை மேற்கொண்டிருந்த வேளையில், அதற்கான வாய்ப்பே இல்லாமல் அவ்விகாரத்தை விடுதலைப் புலிகள் கையாண்டிருப்பதாக படைத்துறை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## படையினரின் உதவியுடன் கருணா...

யில், கருணா தனது நெருங்கிய சகாக்கள் சிலருடன் மட்டக்களப்பிலிருந்து தப்பியோடினார்.

கிழக்கிலிருந்து கருணா தப்பிச் செல்ல அரச படையினரே உதவி செய்ததாக மேற்படி இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது. கருணா அரச படைகளின் உதவியுடன் கொழும்புக்குத் தப்பிவந்து - அவுஸ்ரேலியாவுக்குச் சென்றது குறித்து கருத்துத் தெரிவிக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் மறுத்துள்ளார்.

ஆனால், கருணாவுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிசெய்ய முன்வந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை - ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான சந்திரிகா குமாரதுங்க - புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு பாதுகாப்பான - பொருத்தமான இடத்தைக் கண்டுபிடித்து உதவுமாறு தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்ததாகவும் -

இதனடிப்படையிலேயே கருணா அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - முன்னதாக கருணா தம்மிடம் தஞ்சம் கோரவில்லை என்றும் - அவர் தஞ்சம் கோரினால் புகலிடம் அளிக்கத் தயாராக இருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்திருந்தார்.

கருணா மட்டக்களப்பிலிருந்து தப்பிச்சென்றபோது - தடுத்துவைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுத்துறை உதவிப் பொறுப்பாளர் லெப்.கேணல் நீலன் உட்பட பல போராளிகளைக் கொன்றுவிட்டுச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.